தினமணி

**குறையாத வெங்காய விலை**

First Published : 22 Dec 2010 02:08:40 AM IST

புது தில்லி, டிச. 21: ஏற்றுமதிக்கு தடை உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதிலும் நாடு முழுவதும் வெங்காய விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மொத்த விற்பனையில் கிலோ ரூ. 70-க்கும் சில்லரையில் அதிகபட்சமாக ரூ. 100 வரையிலும்
விற்கப்படுகிறது.

மும்பையில் கிலோ ரூ. 55-க்கும், கொல்கத்தாவில் ரூ. 60-க்கும், தில்லியில் ரூ. 70-க்கும் விற்கப்படும் வெங்காயம் சென்னையில் ரூ. 85 ஆக உயர்ந்துள்ளது. முழுக்க முழுக்க வெளிச்சந்தையை நம்பியிருப்பதால் சென்னையில் விலை உயர்வு அதிகமாக உள்ளது.

சென்னை மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும் வெங்காய
விலை உயர்ந்துள்ளது. எப்போது குறையும்: அடுத்த மூன்று வாரங்களில் வெங்காயம் விலை குறையும் என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார்
நம்பிக்கை தெரிவித்தார்.

வெங்காய விலையைக் குறைக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வேளாண்
அமைச்சகத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**மத்திய அரசை உரிக்கும் எதிர்க்கட்சிகள்:** தவறான பொருளாதாரக் கொள்கை, திறமையற்ற நிர்வாகம் உள்ளிட்ட காரணங்களால் வெங்காயம் விலை உயர்ந்து வருவதாக பாஜக தலைவர் நிதின் கட்கரி தில்லியில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலர் டி. ராஜா கூறும்போது, சந்தை
முதலாளிகளிடம் மத்திய அரசு சரணடைந்து விட்டதால்,
வெங்காய விலை உயர்வைக் கண்டுகொள்ளாமல் மௌனமாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.
திரிணமூல் காங்கிரஸும் வெங்காய விலை உயர்வுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளது.

**மானிய விலையில் உளுந்து விதை, ஜிப்சம்**

First Published : 21 Dec 2010 09:40:24 AM IST

கடலூர், டிச. 20: மணிலா சாகுபடிக்குத் தேவையான ஜிப்சம் மற்றும் உளுந்து சாகுபடிக்குத் தேவையான உளுந்து விதை, மானிய விலையில் வழங்கப்படும் என்று, கடலூர் வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரசன் அறிவித்து உள்ளார்.

அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மணிலா சாகுபடிக்குத் தேவையான ஜிப்சம் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படும்.

மணிலா பயிருக்கு ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் இடவேண்டும். அடியுரமாக 200 கிலோவும் விதைப்பு செய்து 45-வது நாளில் 200 கிலோவும் ஜிப்சம் இட்டு, மண் அணைக்க வேண்டும்.

ஜிப்சம் இடும்போது நிலத்தில் போதிய ஈரம் இருக்க வேண்டும். ஜிப்சத்தில் 24 சதவீதம் சுண்ணாம்பு சத்தும், 18 சதவீதம் கந்தகச் சத்தும் உள்ளது.

சுண்ணாம்புச் சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடையுள்ளதாகவும் உருவாக உதவும். கந்தகச் சத்து மணிலாவில் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்கும்.

கடலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு உள்ள ஜிப்சத்தை மானிய விலையில் வாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தில் (பயறுவகை) மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் உளுந்து விதை வம்பன் 3 ரகம், மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

கடலூர் வட்டாரத்தில் உளுந்து சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தூக்கணாம்பாக்கம் மற்றும் கீழ்குமாரமங்கலம் வேளாண் விரிவாக்க மையங்களில் உளுந்து விதைகளை மானிய விலையில் வாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**கடும் பனிப்பொழிவு: நெற்பயிர்களை நோய் தாக்கும் அபாயம்**

First Published : 21 Dec 2010 09:39:49 AM IST

சிதம்பரம், டிச. 20: சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் கடந்த இரு தினங்களாக பகல், இரவு இருவேளையும் தொடர்ந்து பனிப்பொழிவு இருந்து வருகிறது.

பகலில் வெயில் இன்றி வானம் மூடியபடி உள்ளது. இதனால் இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பனிப்பொழிவு மாலை 5 மணிக்கே தொடங்கி விடுகிறது. இரவு 7 மணிக்கு மேல் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது.

கடும் பனிப்பொழிவால் பொதுமக்கள் வீதியில் நடமாட பயந்து வீட்டுக்குள்ளேயே இருக்கும் நிலை உள்ளது. இதனால் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் 1.50 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் கடந்த 15 தினங்களாக நீரில் மூழ்கியிருந்தன.

தற்போது நீர் வடிந்து வரும் வேளையில் இந்த பனிப்பொழிவால் பயிர்களை நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நோய் தாக்குதல் ஏற்பட்டதால் துளிகூட பயிர் தேறாது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**வேளாண் துறை மூலம் மானிய விலையில் இடுபொருள்கள்**

First Published : 21 Dec 2010 02:26:18 PM IST

திருவாரூர், டிச. 20:திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் எஸ். கோவிந்தசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக சூடோமோனஸ், சிங்சல்பேட், நெல் நுண்ணுட்டம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், இயற்கை பூச்சிக்கொல்லியான வசம்புத்தூள் ஆகியவை 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதை பயன்படுத்தும் வழிமுறைகள்:

நெல் பயிர் இலையின் நுனியில் மஞ்சள்நிறமாகக் காணப்பட்டால் அவை பாக்டீரியா இலைக் கருகல் நோயாக இருக்கும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை தண்ணீரில் கலந்து, வடிகட்டி, அத்துடன் ஒரு கிலோ சூடோமோனாஃப்ஸ 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பயிர் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாக இருந்தால் அவை துத்தநாக சல்பேட் பற்றாக்குறை என்பதால், ஏக்கருக்கு இரண்டு கிலோ யூரியாவுடன் ஒரு கிலோ சிங்சல்பேட் உரத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைசுருட்டுப்புழுவைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு புரோபிடனாபாஸ் 400 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் 500 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பூச்சித் தாக்குதலிலிருந்து பயிரைப் பாதுகாக்க முன்கூட்டியே ஏக்கருக்கு 10 கிலோ வசம்புத் தூளைத் தூவி பூச்சி வராமலும், எலி வயலில் இறங்காமலும் பாதுகாக்கலாம். தேங்கிய மழைநீர் வடிந்தபிறகு, ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கைக் கலந்து, ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் 17 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து உடனடியாக வயலில் தெளிக்க வேண்டும். அரசு வேளாண் துறை மூலம் 50 சத மானிய விலையில் வழங்கும் இடுபொருள்களை விவசாயிகள் பயன்படுத்தி, நெல் பயிர்களைக் காத்துக் கொள்ளுமாறு கோவிந்தசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

**பயிர் கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்**

First Published : 21 Dec 2010 10:48:29 AM IST

புதுச்சேரி, டிச. 20: புதுச்சேரியில் மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு, நடப்பாண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தேசியவாத காங்கிரஸ் கட்சி வலியுறுத்திள்ளது.

புதுச்சேரி முத்தியால்பேட்டையில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: புதுச்சேரியில் தொடர்ந்து பெய்துவந்த பலத்த மழை காரணமாக பயிர்கள் சேதமடைந்தது. அதனால் மழை சேதங்களை அரசு அதிகாரிகள் கொண்ட குழு பார்வையிட்டு நிவாரண தொகைகளை காலதாமதமின்றி வழங்க வேண்டும். நடப்பாண்டில் வழங்கப்பட்ட பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

உரம்,பூச்சி மருந்து வகைகள், விதைகள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விளை நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் வி.ராஜேஸ்வரன், புதுச்சேரி தலைவர் ஜி.சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள் வழங்க சிறப்பு முகாம்**

First Published : 21 Dec 2010 01:17:47 PM IST

காரியாபட்டி, டிச. 20: விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய இடுபொருள்கள் வழங்க சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று நரிக்குடி தோட்டக்கலை உதவி இயக்குநர் பூவலிங்கம் கூறியுள்ளார்.

அவர் கூறியதாவது: தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் நீர், நிலவளத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் காய்கறி விதைகள், வேம்பு புண்ணாக்கு, உயிர் உரங்கள், பூச்சி உரங்கள் போன்ற இடுபொருள்கள் மானிய விலையில் வழங்குவதற்காக, விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளன. இதற்கான சிறப்பு முகாம்கள் டிச.22-ல் சிதம்பராபுரம், டிச.24-ல் செம்பட்டி, அழகாபுரி, டிச.30-ல் பெரியதும்மக்குண்டு, குறையாவார்த்தான், ஜன.4-ல் புலியூரான், ஜன.10-ல் கட்டங்குடி, நரிக்குடி, ஜன.5-ல் எஸ்.நாங்கூர், ஜன.12-ல் திருவிடநல்லூர் கிராமங்களில் நடைபெற உள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

**டிச. 24-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 21 Dec 2010 01:44:40 PM IST

அரியலூர், டிச. 20: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டிசம்பர் 24 ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (டிச. 24) அரியலூர் வருவாய் வட்டாட்சியர் கூட்ட மன்றத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் வேளாண் சம்பந்தமான நீர்ப் பாசனம், கடனுதவிகள், வேளாண்இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டுக்கானநலத் திட்டங்கள் பற்றிய முறையீடுகள் விவாதிக்கப்படும்.எனவே, விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம்என்றார் ஆட்சியர்.

**வெங்காயம் கிலோ ரூ.40: அனைத்து டி.யு.சி.எஸ். கடைகளிலும் விற்பனை**

First Published : 22 Dec 2010 04:04:10 AM IST



சென்னையில் டி.யு.சி.எஸ். கடைகளில் விற்கப்படும் வெங்காயம். (கோப்புப்படம்)

சென்னை, டிச. 21: சென்னையில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கடைகளில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.40-க்கு விற்கப்பட்டு வருகிறது. வெங்காயம் விலை அதிகம் உள்ள மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகம் உள்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோவுக்கு ரூ.40 வரை விற்ற வெங்காயத்தின் விலை இப்போது ரூ.60-ஐ தாண்டி விற்று வருகிறது. விலை உயர்வு அடுத்த மூன்று வாரங்களுக்குத் தொடரும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை கடைகளில் விற்கப்பட்டு வரும் வெங்காயத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது.

500 கிலோ வரை விற்பனை: சென்னையில் திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை உள்ளிட்ட சில இடங்களில் உள்ள டி.யு.சி.எஸ். கடைகளில் மட்டுமே இதுவரை வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலை இறங்கு முகத்தில் இருந்த போது கிலோ ரூ.25 வரை விற்கப்பட்டது.

விலை உச்சத்தை எட்டியுள்ள நிலையில், சென்னையில் வெங்காயம் விற்கப்படும் அனைத்து டி.யு.சி.எஸ். கடைகளிலும் மக்களின் கூட்டம் அலைமோதுகிறது. இதனால், தேனாம்பேட்டை, பெசன்ட் நகர், அசோக்நகர், செனாய் நகர், நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம், பெரியார் நகர் ஆகிய இடங்களில் உள்ள டி.யு.சி.எஸ். கடைகளிலும் மலிவு விலையில் வெங்காயம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் ஸ்வரன் சிங் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இடங்களில் கொள்முதல்: சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.35-க்கும், பெங்களூர் வெங்காயம் (பல்லாரி) கிலோ ரூ.40-க்கும், நாசிக் வெங்காயம் கிலோ ரூ.55-க்கும் டி.யு.சி.எஸ். கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், வெளிச் சந்தையில் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, ஒரு கிலோ வெங்காயம் ரூ.65 வரை விற்கப்பட்டது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, மதுரை உள்ளிட்ட இடங்களில் வெங்காயத்தை மொத்தமாக கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வெங்காயத்துக்கு இணையாக உருளைக் கிழங்கையும் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும் என்றும் ஸ்வரன் சிங் கூறினார்.

ஒரு ஆளுக்கு 2 கிலோ மட்டும்: டி.யு.சி.எஸ். கடைகளில் விற்கப்படும் வெங்காயத்தை வாங்குவதற்கு அளவு உண்டு. ஒரு ஆளுக்கு 2 கிலோ மட்டுமே அளிக்கப்படும். ஹோட்டல்களின் பயன்பாட்டுக்கோ, மொத்தமாக 5 அல்லது 10 கிலோ என்ற நிலையிலோ வெங்காயம் விற்பனை செய்யப்பட மாட்டாது என கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல்லாரி வெங்காயம் நான்கு டன்னும், உருளைக் கிழங்கை 4 டன்னும் கொள்முதல் செய்து விநியோகிக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. சாம்பார் வெங்காயம் (சின்ன வெங்காயம்) 2 டன்னும் கொள்முதல் செய்யப்படுகிறது.

இருப்பு வைக்க முடிவு: டி.யு.சி.எஸ். கடைகளுக்காக கொள்முதல் செய்யப்படும் காய்கறிகளை இருப்பு வைக்க தனியான குளிர்பதன கிடங்கு இல்லை. இதற்கான மாற்று ஏற்பாடு செய்யவும் உணவுத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்கிறார் ஸ்வரன் சிங்.

""கொள்முதல் விலையுடன் போக்குவரத்துச் செலவு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு விற்பனை செய்கிறோம். ஈரோடு, நாகர்கோவில் போன்ற நகரங்களில் வெங்காயத்தின் விலை சென்னை நகருக்கு இணையாக கடுமையாக உள்ளது. எனவே, அங்கெல்லாம் மலிவு விலையில் வெங்காயம் விற்பனை செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஸ்வரன் சிங் தெரிவித்தார்.

**வெங்காயம், பூண்டு விலை உயர்வு**

First Published : 21 Dec 2010 02:50:29 PM IST

வேலூர், டிச.20: வேலூர் மாவட்டத்தில் வெங்காயம், பூண்டு ஆகியன கடும் விலை உயர்வை சந்தித்துள்ளன.

வேலூர் வெங்காய மண்டிகளில் திங்கள்கிழமை முதல்தர வெங்காயம் 50 கிலோ மூட்டை |3,500-க்கும், இரண்டாம் தர வெங்காயம் |3,000-க்கும் விலை போயின.

இதனால் சில்லறை விற்பனையில் கிலோ வெங்காயம் |80-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்தே வெங்காயத்தின் வரத்து உள்ளது.

கர்நாடக மாநிலத்தில் இருந்து வரும் வெங்காய வரத்து ஏறக்குறைய குறைந்துவிட்டது.

வரத்து குறைவும், நீடித்த மழையுமே வெங்காய விலை உயர்வுக்கு காரணம் என்றும் இந்த வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய இயலாது. காய்ச்சல் குறைவான இவை அதிகபட்சம் ஒருவாரம் மட்டுமே தாங்கக் கூடியவை என்றும் மொத்த வியாபாரிகள் கூறினர்.

இன்னும் 10 தினங்கள் மட்டுமே வேலூருக்கு கர்நாடக மாநிலத்தில் இருந்து வெங்காயத்தின் வரத்து இருக்கும். ஜனவரி மாதம் இறுதி வரை வெங்காயத்தின் வரத்து குறைவாகவே இருக்கக் கூடும். எனவே இதன் விலை குறைவதற்கு தற்போது வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

அரக்கோணத்தில் சில்லறை விற்பனையில் வெங்காயம் |80 முதல் |100 வரை திங்கள்கிழமை விற்பனை செய்யப்பட்டது.

வெங்காயத்தின் விலை கடந்த ஒரு வாரமாக ஏற்றத்தை சந்தித்து வருவதை அடுத்தும், அதை நீண்ட நாளுக்கு வைத்திருக்க முடியாத நிலை, ஈரப்பதமாக வரும் வெங்காயத்தில் அழுகல் மற்றும் சேதம் ஆகியவற்றை எடைக் கழிவு போன்ற காரணங்களால் சிறு மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகளில் இதன் விற்பனையை தவிர்க்கத் தொடங்கியுள்ளனர்.

பூண்டு விலையும் உயர்வு

தீபாவளி நேரத்தில் பூண்டு விலை கிலோ |140-க்கு விற்பனையானது. இந்நிலையில் இதன் விலை மெல்ல உயர்ந்து தற்போது கிலோ |280-க்கு வந்துள்ளது.

சீன பூண்டு ஒரு நேரத்தில் |160 விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. அப்போது சாதாரண பூண்டின் விற்பனை விலை |100-யாக இருந்தது. தற்போது சீன பூண்டு வரத்து குறைவு ஏற்பட்டுள்ளதுடன், சீனா, வங்கதேசம் உள்ளிட்ட நாடுகளுக்கும் இந்திய பூண்டு ஏற்றுமதி சமீபகாலமாக செய்யப்படுகிறது.

இதனால் உள்நாட்டில் இதன் விலை முன் எப்போதையும் விட அதிகரித்துள்ளதாகவும், தமிழகத்துக்கு மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், குஜராத் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்தே பூண்டு வரத்து உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

பூண்டு வரத்து ஜனவரி மாத இறுதியில் அதிகரிக்கும் சூழலில் மட்டுமே அதன் விலை குறைய வாய்ப்பு உண்டு என்றும் மொத்த வியாபாரிகள் கூறினர்.

தினமலர்

3 வாரங்களில் வெங்காயம் விலை குறையும் : அரசு பதிலில் நாடு முழுவதும் அதிருப்தி

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2010,23:27 IST



புதுடில்லி : "வெங்காயத்தின் விலை அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் குறையும்' என, மத்திய விவசாய அமைச்சர் சரத் பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார். திடீர் விலை உயர்வை கட்டுப்படுத்த காங்., தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தவறிவிட்டதாக பா.ஜ., - கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள திரிணமுல் காங்., உள்ளிட்ட கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன. அடுத்த மூன்று வாரங்களில் விலை குறையும் என்ற தகவல் மக்களிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன், கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை வைத்து விற்பனை செய்யப்பட்ட வெங்காயம், நேற்று கிலோ விலை ரூ.100 வரை உயர்ந்தது. உணவின் முக்கிய அம்சமான வெங்காயத்தின் விலைஉயர்வு பொதுமக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.வடமாநிலங்களில் பெய்த திடீர் மழையால், வெங்காயப் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துவிட்டதே இதற்கு முக்கிய காரணம் என கூறப்பட்டது. அதுபோல், வெளிநாடுகளுக்கு தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டதும் மற்றுமொரு காரணமாக கருதப்பட்டது.இந்த சூழலில், உள்நாட்டின் தேவையைக் கருத்தில் கொண்டு, நேற்று முன்தினம் முதல், வரும் ஜனவரி 15ம் தேதிவரை வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்ததாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்திருந்தார்.இந்த சூழலில், "இமாலய அளவிற்கு திடீரென உயர்ந்துள்ள வெங்காயத்தின் விலை, அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் குறையும்' என, மத்திய விவசாய அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். காத்திருந்தால் விலை குறையும் என்ற தொனியில் கருத்து தெரிவித்தார்.

**டில்லியில் நிருபர்களிடம் அவர் மேலும் கூறியதாவது:**வெங்காய தேவையைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் எண்ணம் எதுவும் தற்போதைக்கு இல்லை. வெங்காயம் அதிகமாக விளையும் மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் கடந்த நவம்பரில் பெய்த தொடர் மழையால் பெரும்பாலான பயிர்கள் சேதமடைந்துவிட்டன. இதனால் தான் இந்த விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், உத்தரப்பிரதேசம், குஜராத், மத்தியப்பிரதேச மாநிலங்களிலிருந்து வெங்காயம் வரவழைக்கப்பட்டு பிற பகுதிகளுக்கு அனுப்பப்படும். இதன் காரணமாக, அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வெங்காயத்தின் விலை குறையும். இவ்வாறு சரத் பவார் கூறினார்.

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி: இதற்கிடையே, வெங்காயத்தின் விலையில் திடீர் ஏற்றம் ஏற்பட்டதையடுத்து, சில வியாபாரிகள், பாகிஸ்தானிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்துள்ளனர். இதையடுத்து, லாரி ஒன்றுக்கு ஐந்து முதல் 15 டன் வெங்காயம் வீதம் 15 லாரிகளில் நேற்று வெங்காயம் வந்திறங்கியது. இது டில்லி, பஞ்சாபில் விலை சற்றுகுறைய உதவும்.

**அரசியல் கட்சிகள் கண்டனம்:** வெங்காய விலை உயர்வுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. விலைஉயர்வு விஷயத்தில் தாமதமாக அரசு கையாளும் நடைமுறையை பா.ஜ., குறை கூறியது. காங்., தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, மார்க்கெட் ஆதிக்க சக்திகளிடம் முற்றிலும் சரணடைந்துவிட்டதாக இந்திய கம்யூனிஸ்ட்

கட்சியின் தேசிய செயலர் ராஜா குறை கூறினார். பால், பெட்ரோல் ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**பா.ஜ., தலைவர் நிதின் கட்காரி கூறுகையில்,** "மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கை மற்றும் நிர்வாக சீர்கேடு போன்றவற்றால் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது' என்றார்.மேற்கு வங்கத்தில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள சூழலில், மத்திய அரசின் கூட்டணியில் இடம் பெற்றுள்ள திரிணமுல் காங்., கட்சியும் வெங்காய விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் வெங்காயம் விலை**

சென்னை - ரூ.80 முதல் ரூ.100
கோவை - ரூ.65
மதுரை - ரூ.80
தேனி - ரூ.80
திண்டுக்கல் - ரூ.80
நெல்லை - ரூ.70

சின்ன வெங்காயம் கிலோ 40 ரூபாய்க்கும் மேல் உயர்ந்தது.மேலும், பெரிய வெங்காயம் எனப்படும் பெல்லாரி வெங்காயம் அதிக விலை விற்பதால், ஓட்டல்களில் உள்ள உணவுப்பண்டங்களில் வெங்காயம் அரிதாகிவிட்டது.

**ராஜராஜன் 1000 சாகுபடி செய்தால்ஒன்றரை மடங்கு கூடுதல் மகசூல் பெறலாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:51 IST

அவலூர்பேட்டை:விவசாயிகள் ராஜராஜன் 1000 சாகுபடியில் புதிய அணுகு முறையை பின்பற்றுவதால் வழக்கத்தை விட ஒன்றரை மடங்கு உற்பத்தி அதிகரிக்கிறது.
இவ்வாறு கலெக்டர் பழனிசாமி பேசினார்.மேல்மலையனூரில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு ஆரம்ப நிலை பயிற்சி
நடந்தது.இந்த பயிற்சியை கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் நந்தகுமார் வரவேற்றார். சப்-கலெக்டர் ரோகிணி ராம்தாஸ், வேளாண் இணை இயக்குநர் ராமகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இதில் கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி பேசியதாவது:தமிழக அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் விவசாயிகள்

முழுமையாக பயன்படுத்த வேண்டும். மற்ற பணிகளை விட விவசாயத்தில் ஈடுபட்ட சகோதர, சகோதரிகள் திட்டங்களை புரிந்து கொள்ள வேண்டும். கிராமங்களில் ஏழ்மை நிலை ஒழிக்கப்படவேண்டும்.

இயற்கை ஆதாரங்களை பாதுகாத்தல், பண்ணை குட்டைகள், தடுப்பணைகள் , புது குளம், ஏரி பழுது பார்த்தல், காடு வளர்ப்பு , வேளாண் காடுகள் , தீவன புல் அமைத்தல், நிலம் சமப்படுத்துதல், புதிய நெல்பயிர்கள் கண்டுபிடித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது.ஆடு மற்றும் கோழி வளர்ப்பு பணிகளால் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியும். வாழ்வாதார பணிகளை மேற்கொள்ளுதல், மீன் பண்ணை அமைத்தல் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். முதல் கட்ட நடவடிக்கையாக குடிநீர் தேவை பூர்த்தி செய்வதற்காக இப்பகுதியில் 27 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இருக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.செஞ்சி, மேல்மலையனூர் மேட்டுப்பாங்கான பகுதிகளில் கிடைக்கும் நீரை பயன்படுத்தி சிக்கனமாக ராஜராஜன் 1000 நெல்பயிர் வைப்பது சிறந்தது. புதிய அணுகு முறையை பின்பற்றும் போது வழக்கத்தை விட 1.5 மடங்கு உற்பத்தி அதிகரிக்கிறது.இவ்வாறு கலெக்டர் பழனிசாமி பேசினார்.

**பூச்சி தாக்குதலால் சூரியகாந்தியில் சேதம்:தடுக்க துணை இயக்குனர் யோசனை**
பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:29 IST

நாமக்கல்: "சூரியகாந்தி பயிரை தாக்கும் பூச்சியினத்தை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப்பொறி மற்றும் விளக்குப்பொறியை வைக்க வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: சூரியகாந்திப் பயிரை பல வகையான பூச்சியினம் தாக்கி சேதம் ஏற்படுத்தி வருகிறது. அவற்றில் பச்சை காய்ப்புழு, புரோடீனியா, வெட்டுப்புழு, வெட்டுக்கிளி போன்றவை விதை மற்றும் இலையை தின்று சேதம் ஏறபடுத்துகிறது. மேலும், சாறு உறிஞ்சும் பூச்சிகளான பச்சை தத்துப்பூச்சி, வெள்ளை ஈ மற்றும் இலைப்பேன் போன்றவை இளம் பயிரை தாக்கி சேதம் ஏற்படுத்தும். விதை உருவாகும் நேரத்தில் பச்சை கிளிகள் விதைகளை தின்று, உற்பத்தி திறனைக் குறைக்கிறது. எனவே விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்பாட்டு முறைகளை கடைபிடிக்க வேண்டும். பச்சைக் காய்ப்புழு முட்டையிலிருந்து வெளிவரும் இளம்புழுக்களில் முன்றாம் நிலைப் புழுக்கள் விதையை துளைத்து அதிக சேதம் ஏற்படுத்தும். அதைக் கட்டுப்படுத்த இனக் கவர்ச்சிப்பொறி மற்றும் விளக்குப்பொறியை வைத்து தாய் அந்துப்பூச்சியை கவர்ந்து அழிப்பது சிறந்தது. மேலும், பூச்சிகளை கைகளால் சேகரித்து அழிக்க வேண்டும். பறவை தாங்கியை வயலில் அமைத்து அதிக அளவில் பறவைகளின் வரவை அதிகரித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம். என்.பி.வி., வைரஸை காலை, மாலை நேரங்களில்

தெளிக்க வேண்டும் டிரைக்கோ கிர்மா, கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு இரண்டரை சி.சி., என்ற அளவில் பதினைந்து நாள் இடைவெளியில் விட வேண்டும். வெட்டுப்புழு முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் இலையின் நரம்பை மட்டும் விட்டுவிட்டு மற்ற பகுதியை முழுமையாக தின்று அதிக சேதம் ஏற்படுத்தும். இரவு நேரங்களில் அதன் தாக்குதல் அதிகம் காணப்படும். அதை கட்டுப்படுத்த ஆமணக்கு பயிரைப் பொறிப்பயிராக வளர்த்து முட்டைக் குவியலையும் புழுக்களை சேகரித்துக் கட்டுப்படுத்த ÷ண்டும். இனக்கவர்ச்சிப் பொறி, விளக்குப் பொறி வைத்து அந்துப் பூச்சிகளை கவர்ந்து அளிக்க வேண்டும். வெட்டுக் கிளிகளை எண்டோசல்பான் 4 சதவீதம், 10 கிலோ தூவி கட்டுப்படுத்தலாம். அல்லது எண்டோசல்பான் 35 இ.சி., 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும், சாறு உறிஞ்சும் பூச்சிகள், பச்சை தத்துப்பூச்சி இலைகளின் அடிப்பாகத்தில் கூட்டமாக இருந்து கொண்டு சாறை உறிஞ்சி சேதம் விளைவிக்கின்றன. தாக்கப்பட்ட இலைகள் மஞ்சள் நிறமாகவும் சுருங்கியும் காணப்படும். வெள்ளை ஈ தாக்கப்பட்ட இலைகள் பசுமை இழந்து திட்டுத் திட்டாக மஞ்சள் நிறத்துடன் தென்படும். பின், இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடும். இலைப்பேன்களின் தாக்குதலால், இலைகள் கருக நேரிடும். இவைகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு எண்டோசல்பான் 35 இ.சி., 400 மி.லி., தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புளி விலை கிலோ ரூ.110 : 3 மாதத்தில் 2 மடங்கு விலை உயர்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:51 IST

சேலம்: தமிழகத்தில் புளியின் விளைச்சலில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக கடந்த மூன்று மாதத்தில் அதன் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் புளியின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் பெரிய வியாபாரிகள் அதிக அளவில் புளியை பதுக்கி வைத்துள்ளதால் நேற்று புளி விலையில் கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரிக்கப்பட்டது. தமிழகத்தில் பொதுவாக மார்ச் முதல் வாரத்தில் துவங்கும் புளி சீஸன் ஜூன் மாதம் வரை இருக்கும். இந்த காலங்களில் புளியின் விலையில் சரிவு ஏற்படுவது வழக்கம். ஆனால் நடப்பாண்டு புளி அதிக அளவில் விளையும் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை. சேலம், மதுரை, திருச்சி, சென்னை உள்ளிட்ட இடங்களில் செயல்படும் புளி மண்டிகளுக்கு, ஜூன் மாதம் மகாராஷ்டிரா, பீகார், சத்திஸ்கர், ஒரிஸா மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புளிகள் அதிக அளவில் தேக்கம் அடைந்துள்ளது. இந்த புளிகளை வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து மண்டிகளிலேயே வைத்துள்ளனர். ஆனால், வெளிமார்க்கெட்டில் புளியின் தேவை அதிகரித்துள்ள நிலையில் வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்து

புளியின் வரத்து முற்றிலும் நின்று விட்டது. சேலம் மாவட்டத்தில் புளி அதிக அளவில் விளையும் வாழப்பாடி, ஆத்தூர், ஏற்காடு, கல்ராயன் மலைப்பகுதி, தர்மபுரி மாவட்டம் அரூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தொடர்ந்து பெய்த மழையால் புளி அறுவடையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சேலம் லீபஜாருக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த புளியின் வரத்து முற்றிலும் நின்று விட்டது. இதனால் சேலத்தில் இருந்து சென்னை, விருதுநகர், மதுரை ஆகிய இடங்களுக்கு புளி விற்பனை முற்றிலும் தடை பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆந்திர மாநிலம் இந்துப்பூர், விஜயவாடா, ஹைதராபாத், கர்நாடக மாநிலம் தும்கூர், ஹேஸ்பேட்ல மகாராஷ்டிரா அகமத்நகர் ஆகிய இடங்களின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் அங்குள்ள வியாபாரிகள் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளிடம் புளியை நேரடியாக கொள்முதல் செய்து வருகின்றனர். கடந்த அக்டோபர் மாதத்தில் 45 ரூபாய்க்கு விற்ற புளி நவம்பரம் மாதத்தில் 65 ரூபாய்க்கு உயர்ந்தது. இந்த உயர்வு டிசம்பர் முதல் வாரத்தில் 100 ரூபாயாக அதிகரித்தது. இந்நிலையில் மொத்த வியாபாரிகள் குடோன்களில் புளியை இருப்பு வைத்துக் கொண்டு, மேலும் புளியை கொள்முதல் செய்ய துவங்கி உள்ளனர். இதனால் வெளி மார்க்கெட்டில் புளியின் தேவை அதிகரித்து நேற்று கிலோவுக்கு மேலும் 10 ரூபாய் அதிகரித்து கிலோ 110 ரூபாய்க்கு விற்கிறது. இந்த விலை உயர்வு மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர். எனவே புளியின் விலையை கட்டுப்படுத்தும் வகையில் குடோன்களில் புளியை தேக்கி வைத்துள்ள வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வெங்காயம் விலை திடீர் உயர்வால் மக்கள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,01:49 IST

திருச்சி: திருச்சியில் வெங்காயம் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. இதனால், பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். திருச்சிக்கு கர்நாடகா, மஹாராஷ்டிரா போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் பகுதியிலிருந்தும் அதிகளவு வெங்காயம் வருகிறது. நாள்தோறும் 300 லோடு வெங்காயம் திருச்சிக்கு வருகிறது. மழை காரணமாக பெரும்பாலான வெங்காய செடிகள் அழுகிவிட்டன. வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்வதால், வெங்காயத்தின் விலை சமீபகாலமாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் பெரியவெங்காயம் 30, சிறியவெங்காயம் 24 ரூபாய் என்று இருந்தது. தற்போது மூன்று மடங்காக வெங்காயம் விலை உயர்ந்துள்ளது. பெரிய வெங்காயம் (நன்கு உலர்ந்தது) கிலோ 80, சிறிய வெங்காயம் 65 என விற்கப்படுகிறது. ஈரப்பதம் உள்ள பெரிய வெங்காயம் 35, சிறிய வெங்காயம் 20 ரூபாய் என விற்கப்படுகிறது. திடீர் விலை உயர்வால் வியாபாரிகளும், மக்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:03 IST

அரியலூர்: அரியலூரில் வருகிற 24ம் தேதி விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது. இதுபற்றி அரியலூர் மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வருகிற 24ம் தேதி காலை 11 மணிக்கு, அரியலூர் தாலுகா அலுவலக கூட்ட அரங்கத்தில், மாவட்ட கலெக்டர் பொன்னுசாமி தலைமையில் நடக்கிறது. வேளாண்மை, நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண்துறை இயந்திரங்கள் மற்றும் வேளாண்மை மேம்பாட்டுக்கான நலத்திட்ட திட்டங்கள் பற்றி விவாதிக்கப்படவுள்ள இக்கூட்டத்தில், வேளாண் சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**வேப்பூரில் விவசாயிகள்கலந்துரையாடல் கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,03:14 IST

விருத்தாசலம்:விருத்தாசலம் அடுத்த வேப்பூரில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் விவசாய விளைபொருள் குழு மற்றும் நீர்பாசன சங்க பிரதிநிதிகள் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.வேளாண் விற்பனை துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா, உதவி வேளாண் அலுவலர்கள் ஜெயபால், சிவக்குமார், அறிவழகன் முன்னிலை வகித்தனர். அருள்பிரகாசம் வரவேற்றார்.கூட்டத்தில் விவசாயிகளின் விளைபொருட்களை எவ்வித இடைத் தரகர்களும் இல்லாமல் நேரடியாக கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள், லாபம் குறித்து விளக்கப்பட்டது.
மேலும் மக்காச்சோளம், உளுந்து, எள் உள்ளிட்ட பொருட்களின் தேவை, கொள்முதல் குறித்து பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் விவசாயிகளிடம் விளக்கினர்.
அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கண்ணன் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். வேளாண்மை அலுவலர் சுரேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

வனப்பகுதியில் சிறப்பு ரோந்து : தாது உப்புக் கட்டி மூலம் யானைகளை முடக்க திட்டம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,01:45 IST

ஓசூர்: ஓசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் ஜவளகிரி வனப்பகுதியில் யானைகள் மலைக்கிராமங்களில் இடம்பெயர்வதை தடுக்க வனப்பகுதியையொட்டி உள்ள நீர்நிலைகளில் தாது உப்பு கட்டிகள் வைத்து வனச்சரகர்கள் தலைமையில் 15 கொண்ட சிறப்பு குழுக்கள் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கடந்த ஒரு மாதமாக யானைகள் வனப்பகுதியை விட்டு வெளியேறி மலைக்கிராமங்களில் அட்டகாசம் செய்து வருகின்றன. விவசாய நிலங்களை அழித்து வருவதால் விவசாயிகள் பீதியடைந்துள்ளனர். இதையடுத்து யானைகளை கட்டுப்படுத்த வனத்துறை தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் உலகநாதன் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் பன்னர்கட்டா வனப்பகுதியில் இருந்து 200 யானைகள் இடம்பெயர்ந்து ஓசூர் வனப்பகுதியில் வருகிறது. இது யானைகளின் வழக்கமான பழக்க வழக்கமாகும். அது போல் நடப்பாண்டும் தற்போது கர்நாடகா யனைகள் ஓசூர் வனப்பகுதியில் இடம்பெயர்ந்துள்ளன. அதற்கு ஏற்றார் போல் இந்த காலக்கட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, ஜளவகிரி வனப்பகுதியையொட்டிய மலைக்கிராமங்களில் யானைகளுக்கு மிகவும் பிடித்தமான ராகி, சோளம் போன்ற உணவு பயிர்கள் அதிகளவில் விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.

மலைக்கிராமங்களில் யானைகள் தீண்டாத பயிர்களை பயிர் செய்ய வனத்துறை விவசாயிகளுக்கு அறிவுறுத்தியும் ராகி, சோளம் போன்ற உணவு பயிர்களை பயிர் செய்துள்ளனர். இதனால், யானைகள் வனப்பகுதியில் போதுமான உணவு, தண்ணீர் கிடைத்தும் ராகி, சோளம் உணவு பயிர்களை தேடி மலைக்கிராமங்களில் வந்து விடுகின்றன. யானைகள் நடமாட்டம் மிகுந்த தேன்கனிக்கோட்டை, ஓசூர் மற்றும் ஜவளகிரி வனப்பகுதியில் விவசாய நிலத்தில் புகும் யானைகளை விரட்ட இரவில் வனச்சரகர்கள் தலைமையில் சிறப்பு குழுக்கள் அமைத்து கண்காணிப்பு செய்யப்படுகிறது. ஒவ்வொரு குழுவிலும் 15 வனப்பணியாளர்கள் உள்ளனர்.

இந்த குழுவினர் பட்டாசுகள், ஒளிமிகு டார்ச் லைட்டுகள் ஆகியவற்றுடன் யானைகள் விவசாய நிலங்களில் புகுந்து விடாமல் வனப்பகுதியில் விரட்டி வருகின்றனர். விவசாயிகளுக்கு யானைகள் நடமாட்டம் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படுகிறது. யானைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் நோட்டீஸ்கள் அச்சிட்டு பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கும் யானைகளை விரட்ட பட்டாசு, டார்ச் லைட்டுகள் வழங்கப்படுகிறது. வனப்பகுதியில் யானைகள் இடம்பெயர்வை

தடுக்க வனத்தில் உள்ள நீர்நிலைகளையொட்டி தாது உப்பு கட்டிகள் வைக்கப்படுகிறது. தாது உப்புகளை சாப்பிடும் யானைகள், தொடர்ந்து நடமாடாமல் நீர் நிலைகளில் தண்ணீர் குடித்து முடங்கி விடும். யானைகளால் பாதித்த 668 விவசாயிகளுக்கு 31 லட்சத்து 67 ஆயிரத்து 400 ரூபாய் பயிர் இழப்பீட்டு தொகை வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு தீவன விதை வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,01:44 IST

தர்மபுரி: தர்மபுரி அடுத்த நாகரசம்பட்டியில் நடந்த விழாவில் விவசாயிகளுக்கு தீவன விதைகள் வழங்கப்பட்டன.
தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை பணிகளை ஆணையர் மாலிக் பெரோஸ்கான் ஆய்வு செய்தார். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை பெரு மருத்துவமனை, தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையம் மற்றும் கால்நடை கிளை நிலையம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். தர்மபுரி ஒன்றியம் நாகரசம்பட்டியில் நடந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமை துவக்கி வைத்து பல்வேறு பயனாளிகளுக்கு தீவன விதை மற்றும் தீவன பயிர்களை வழங்கினார். இதையொட்டி, 1,537 கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடைத் துறை மண்டல இணை இயக்குனர் ஞானோபகாரம், துணை இயக்குனர் பாலசுப்பிரமணியம், உதவி இயக்குனர் செல்வராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வாழைப்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.4.25 லட்சம் இன்சூரன்ஸ் வழங்கப்படும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,03:23 IST

செய்துங்கநல்லூர்:வாழைப்பயிருக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.4 லட்சத்து 25 ஆயிரம் இன்சூரன்ஸ் வழங்கப்படுவதாக தோட்டக்கலை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். கருங்குளம் யூனியன் செய்துங்கநல்லூர் தோட்டக்கலைத்துறை சார்பில் நடந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் பயிற்சிக்கு தூத்துக்குடி தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் செய்யது அகமது தலைமை வகித்தார். அவர் கூறியதாவது, பயிர் இன்சூரன்ஸ் குறித்து விவசாயிகள் விழிப்புணர்வு பெறவேண்டும். தற்போது நம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இயற்கை இடர்பாடு காரணமாக எத்தனையோ விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றை அரசு கணக்கெடுத்து கொண்டிருக்கிறது. அரசு இதுபோன்ற சமயங்களில் எவ்வளவுதான் உதவி செய்ய முடியும் என்பதை விவசாயிகள் உணர வேண்டும். எப்போதும் அரசு உதவிக் கொண்டிருக்கும் என்று கூறமுடியாது. இதற்கு மாறாக விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் செய்து கொள்ள முன்வர

வேண்டும். அரசு பயிர் இன்சூரன்சுக்காக வாழைப் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.4 லட்சத்து 27 ஆயிரத்து 248 என மதிப்பீடு செய்துள்ளது. இதற்கு பிரிமியமாக 7.2 சதவீதம் செலுத்த வேண்டும். அதாவது 30 ஆயிரத்து 120 ரூபாய் செலுத்த வேண்டும். இதில் பாதி பணம் அரசு மானியமாக கொடுத்து விடுகிறது. எனவே விவசாயிகள் ரூ.15 ஆயிரத்து 60 மட்டும் செலுத்தினால் போதும். ஆனால் விவசாயிகள் தங்கள் பயிரின் மதிப்பை தாங்களே குறைத்துக் கொண்டு, ஏக்கருக்கு ஒரு லட்சம் தான் மதிப்பீடு என்று நிர்ணயம் செய்து அதற்குரிய பிரிமீயம் 7200ல் பாதி 3600 மட்டுமே செலுத்துகின்றனர். தங்கள் பயிரின் மதிப்பை அவர்களே ஏன் இழக்க வேண்டும் என்று தெரியவில்லை. அதேபோல் மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.21 ஆயிரத்து 480 என மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு அதில் பாதி பிரிமீயம் ரூ.ஆயிரத்து 180 மட்டும் செலுத்தலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை வாழைப்பயிருக்கு 5லட்சத்து 32 ஆயிரத்து 562 ரூபாய் பயிர் இன்சூரன்ஸ் பிரிமீயம் வழங்கப்பட்டுள்ளது. கருங்குளம் பகுதியில் ரூ.2லட்சத்து 99 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டத்தில் விவசாயிகள் சேர முன்வர வேண்டும். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் விவசாயிகள் விழிப்புணர்வு பெற வேண்டும். அதேபோல் யூனியனில் துல்லிய பன்னையம் அமைக்க மானியக் கடன்கள் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், திசு வாழை பயிரிடும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. அரசின் திட்டங்களில் பங்கு பெற்று விவசாயிகள் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**வாழை, மஞ்சள் பயிரில் சங்குப்புழு தாக்குதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:21 IST

சத்தியமங்கலம்: வாழை மற்றும் மஞ்சள் பயிரில் சங்கு புழுக்கள் தாக்குதலால் விவசாயப் பயிர்கள் பெரிதும் சேதமடைவதால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். மஞ்சள் விலை சில மாதங்களாக அதிகரித்துள்ளதால், சத்தி பகுதியில் நடப்பாண்டு மஞ்சள் பயிரை விவசாயிகள் அதிகமாக பயிரிட்டுள்ளனர். மஞ்சள் பயிர் நன்றாக வளர்ந்து, கிழங்கு பிடிக்கும் நிலையில் உள்ளது. இப்பகுதியில் பெய்த தொடர்மழை காரணமாக மஞ்சள் பயிரில் வேரழுகல் நோய் ஏற்பட்டது. பல்வேறு மருந்து தெளித்தும் எதிர்பார்த்த பலன் இல்லாத காரணத்தால், விவசாயிகள் செய்வதறியாது திகைத்துள்ளனர். மஞ்சள் விவசாயிகளுக்கு அடுத்த பாதிப்பாக, மஞ்சள் மற்றும் வாழைப்பயிரில் சங்கு புழுக்கள் படையெடுத்துள்ளன. சங்குபுழுக்கள் மஞ்சள் வயலுக்குள் சென்று மஞ்சள் கிழங்கை தின்று சேதப்படுத்துகிறது. கிழங்கு முற்றிலும் சேதமடைகிறது. இதுபோல், வாழையையும் சங்குப்புழு விட்டுவைக்கவில்லை. வாழை மரம் மற்றும் இலையில் இந்த சங்கு புழுக்கள் குடியேறி, மரத்தில் உள்ள நீரையும் உறிஞ்சி, மரத்தை முற்றிலும் பாதிக்கிறது.

சங்குப்புழுக்களை கொல்ல, விவசாயிகள் மருந்து தெளித்தும், சங்கு புழுக்களை பொறுக்கி எடுத்து, குழிவெட்டி புதைத்தும் வருகின்றனர்.

**அடுத்த போகத்துக்கு தயாராகும் நெல் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,02:21 IST

ஈரோடு:காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில், ஈரோடு பகுதியில், அடுத்த போகத்துக்கு மீண்டும் நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் விளைநிலங்களை சீரமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் ஆண்டு தோறும் 17 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டு தோறும் ஜூன் 16ல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. நடப்பாண்டில், சீரமைப்பு பணிகள் நடந்ததால், பணிகள் முடிந்து, ஜூலை 11ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. அக்டோர் மாதம் முடிக்க வேண்டிய நெல் அறுவடை பணி, சென்ற வாரம் 90 சதவீதம் முடிந்துள்ளது. மழையால் எந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாமல், தொழிலாளர்கள் மூலம் அறுவடை நடக்கிறது. ஈரோடு, பி.பி.,அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதிகளில் நெல் அறுவடையை முடித்த விவசாயிகள், வாய்க்காலில் தண்ணீர் நிறுத்த நான்கு மாதம் உள்ளதால், அடுத்த கட்ட நெல் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். வயலில் உழவுக்காக தண்ணீர் தேக்கிய நிலையில், உரத்துக்காக வாத்துகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர். காலிங்கராயன் வாய்க்கால் பாசனப்பகுதியில் தற்போது வயல்களில் வாத்து பட்டிகள் அதிகளவு காணப்படுகின்றன. அடுத்த இரண்டு நாட்களில் நெல் நாற்றங்கால் அமைக்க, உழவுப் பணி துவங்க உள்ளனர். இம்முறையும் 90 நாளில் விளையும் குண்டு ரக நெல்லையே விவசாயிகள் சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளனர். ஈரோடு வைராபாளையம் விவசாயி மணி கூறியதாவது: சென்ற முறை ஒரு ஏக்கரில் குண்டு ரக நெல் சாகுபடி செய்தேன். நெல் கதிர் நன்கு விளைந்த நிலையில், தொடர்ந்து மழை பெய்ததால், கதிருடன் பயிர் நீரில் மூழ்கியது. வழக்கமாக ஏக்கருக்கு இரண்டு டன் வரை நெல் உற்பத்தியாகும். தற்போது ஒன்றரை டன் கூட உற்பத்தியாவில்லை. நீரில் நெற்பயிர் மூழ்கியதால், எந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியவில்லை. வைக்கோல் தேவைப்பட்டதால், ஆட்கள் மூலம் அறுவடை செய்கிறேன். வயலில் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்த நான்கு மாத காலம் உள்ளதால், மீண்டும் நெல் குறுகிய கால குண்டு ரக நெல் சாகுபடி செய்ய உள்ளேன். தண்ணீர் நிறுத்துவதற்குள் அறுவடையை முடித்துவிடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**கலக்கம்கரும்பு விவசாயிகள் அறுவடை தவறியதால் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:10 IST

மானாமதுரை:அறுவடை காலம் தவறியதால், மானாமதுரையில் கரும்பு பயிர் பூக்க துவங்கியுள்ளது. இதனால் கரும்பின் தன்மை பாதிக்கப்பட்டு, உரிய விலை கிடைக்குமா? என்ற சந்தேகம் நிலவுகிறது. கடன் வாங்கி பயிரிட்ட விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் கரும்பு விவசாயம், லாபம் கொடுக்கும் தொழிலாக இருந்தது. ஆனால் அந்த காலகட்டம் கனவாகி, தற்போது கரும்பு விவசாயிகள் கண்ணீர் வடிக்கும் நிலை. கடந்த மூன்று ஆண்டுகளாக கரும்பு விவசாயிகள் நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றனர்.நடவு, பயிர் பாதுகாப்பு, பாசனம் என செலவுகள் அதிகரித்துள்ளதால் கரும்பு சாகுபடியில் லாபம் குறைந்து வருகிறது.

வறட்சி, கன மழை போன்ற பருவ நிலைகளாலும், கரும்பு விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.மானாமதுரையில் நடப்பு ஆண்டும் அதிகளவு கரும்பு பயிரிட்டனர். கடந்த ஒரு மாதமாக பெய்த மழையால், விளைந்த கரும்பை உரிய பருவத்தில் வெட்ட முடியவில்லை; ஆட்கள் கிடைக்காமலும், இயந்திரங்கள் மூலம் வெட்ட வாய்ப்பு இல்லாததாலும் அப்படியே விடப்பட்டன. வெட்டுவதில் சுணக்கம் ஏற்பட்டதால், கரும்பு பூத்து வருகிறது. பூப்பதால் கரும்பின் இனிப்பு தன்மை மங்கி, பிழிதிறன் குறையும்; கரும்புக்கு உரிய விலை கிடைக்காது.இதனால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். விவசாயி பாலமுருகன் கூறுகையில், ""எனது தோட்டத்தில் கடந்த நவம்பரில் கரும்பு வெட்ட வேண்டும். கடும் மழை பெய்ததால் நிலம் ஈரமாக இருந்தது; வெட்டுவதற்கு வந்த இயந்திரம் திருப்பி அனுப்பப்பட்டது. மழை குறைந்தும் வெட்ட ஆள் கிடைக்கவில்லை," என்றார்.

**திருச்செந்தூர் வட்டாரத்தில் பயிர் காப்பீட்டுத்திட்டம் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,03:28 IST

திருச்செந்தூர்:திருச்செந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பயிர் காப்பீட்டு திட்டம் பற்றிய விளக்கக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு திருச்செந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜேம்ஸ் ஹென்றி ரோஸ் தலைமை வகித்து பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசியத்தை கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர் உத்தண்டராமன் தேசிய வேளாண் திட்டம் பற்றி கூறினார். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதன் மூலம் இயற்கை இடர்பாடுகளான மழை வெள்ளம், வறட்சி மற்றும் பூச்சிநோய் தாக்குதலால் இழப்பு ஏற்படும் போது இழப்புத் தொகை பெறமுடியும். காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும், குத்தகைக்கு பயிரிடுவோர் உட்பட இத்திட்டத்தில சேர்க்கப்படுவர். தொடக்க

வேளாண்மை கூட்டுறவு பாங்க் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட பாங்கில் கடன்பெறும் விவசாயிகள் காப்பீடு செய்வதற்கான பிரீமியத் தொகையினை அந்தந்த பாங்க் மூலம் செலுத்தலாம். கடன் பெறாத விவசாயிகள் பிரீமியத் தொகையினை அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்கில் செலுத்தலாம். பிரீமியத் தொகையில் அரசு மானியமாக 50 சதவீதம் வழங்குகிறது. நெற்பயிருக்கு 50 சதவீதம் பிரீமியத் தொகையாக ஏக்கருக்கு ரூ.162 செலுத்த வேண்டும் என தெரிவித்தார். பயிற்சியில் கலந்து கொண்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் தானுபிள்ளை வாழைப் பயிருக்கான காப்பீட்டுத்திட்டம் பற்றியும், பிரீமியத் தொகையாக காப்பீட்டுத் தொகையில் 7.05 சதவீதமாகவும், அதில் 50 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். மேலும் திருச்செந்தூர் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் நலப்பணியாளர்கள் மற்றும் பஞ்., எழுத்தர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் மகாதேவன் நன்றி கூறினார்.

**முன்னதாகவே துவங்கிய நெல் அறுவடை பணிகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:59 IST

கூடலூர்: கூடலூர் பகுதியில் நிலவும் மந்தமான காலநிலை காரணமாக, நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் முன்னதாகவே நெல் அறுவடையை துவக்கியுள்ளனர். கூடலூர் புத்தூர்வயல் பகுதியில் "பூ புத்தரி' எனப்படும் கதிர் அறுவடை திருவிழா கடந்த 27ம் தேதிபாரம்பாரிய முறைப்படி நடந்தது. நவம்பர் மாதம் கடைசி வாரத்தில் நெற்கதிர்கள் முதிர்ந்து அறுவடைக்கு தயாராகின. தொடர்ந்து இப்பகுதியில் மழை மற்றும் மந்தமான காலநிலை நிலவியதால் நெல் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். முதிர்ந்த நெற்கதிர்கள் குறித்த நேரத்தில் அறுவடை செய்யாததால், அவை உதிர்ந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் சூழல் ஏற்பட்டது. இதனால், விவசாயிகள் நெற்கதிர் அறுக்கும் பணியை தற்போதே துவக்கியுள்ளனர். நெல் அறுவடை பணிகளில் ஆதிவாசி பெண்களே அதிகம் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து பாடந்துறை பகுதியை சேர்ந்த விவசாயி கிருஷ்ணன் கூறுகையில், ""ஆண்டு தோறும் கார்த்திகை மாதம் வெயில் அதிகமாக இருக்கும். ஆனால், தற்போது நெல் முதிர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. பெரும் நஷ்டத்தை தவிர்க்க வேறு வழியின்றி நெல் அறுவடையை தற்போதே துவக்கியுள்ளோம்,'' என்றார்.

**வாழைப்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.4.25 லட்சம் இன்சூரன்ஸ் வழங்கப்படும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,03:23 IST

செய்துங்கநல்லூர்:வாழைப்பயிருக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.4 லட்சத்து 25 ஆயிரம் இன்சூரன்ஸ் வழங்கப்படுவதாக தோட்டக்கலை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். கருங்குளம் யூனியன் செய்துங்கநல்லூர் தோட்டக்கலைத்துறை சார்பில் நடந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் பயிற்சிக்கு தூத்துக்குடி தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் செய்யது அகமது தலைமை வகித்தார். அவர் கூறியதாவது, பயிர் இன்சூரன்ஸ் குறித்து விவசாயிகள் விழிப்புணர்வு பெறவேண்டும். தற்போது நம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இயற்கை இடர்பாடு காரணமாக எத்தனையோ விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவற்றை அரசு கணக்கெடுத்து கொண்டிருக்கிறது. அரசு இதுபோன்ற சமயங்களில் எவ்வளவுதான் உதவி செய்ய முடியும் என்பதை விவசாயிகள் உணர வேண்டும். எப்போதும் அரசு உதவிக் கொண்டிருக்கும் என்று கூறமுடியாது. இதற்கு மாறாக விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் செய்து கொள்ள முன்வர வேண்டும். அரசு பயிர் இன்சூரன்சுக்காக வாழைப் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.4 லட்சத்து 27 ஆயிரத்து 248 என மதிப்பீடு செய்துள்ளது. இதற்கு பிரிமியமாக 7.2 சதவீதம் செலுத்த வேண்டும். அதாவது 30 ஆயிரத்து 120 ரூபாய் செலுத்த வேண்டும். இதில் பாதி பணம் அரசு மானியமாக கொடுத்து விடுகிறது. எனவே விவசாயிகள் ரூ.15 ஆயிரத்து 60 மட்டும் செலுத்தினால் போதும். ஆனால் விவசாயிகள் தங்கள் பயிரின் மதிப்பை தாங்களே குறைத்துக் கொண்டு, ஏக்கருக்கு ஒரு லட்சம் தான் மதிப்பீடு என்று நிர்ணயம் செய்து அதற்குரிய பிரிமீயம் 7200ல் பாதி 3600 மட்டுமே செலுத்துகின்றனர். தங்கள் பயிரின் மதிப்பை அவர்களே ஏன் இழக்க வேண்டும் என்று தெரியவில்லை. அதேபோல் மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.21 ஆயிரத்து 480 என மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு அதில் பாதி பிரிமீயம் ரூ.ஆயிரத்து 180 மட்டும் செலுத்தலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை வாழைப்பயிருக்கு 5லட்சத்து 32 ஆயிரத்து 562 ரூபாய் பயிர் இன்சூரன்ஸ் பிரிமீயம் வழங்கப்பட்டுள்ளது. கருங்குளம் பகுதியில் ரூ.2லட்சத்து 99 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டத்தில் விவசாயிகள் சேர முன்வர வேண்டும். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் விவசாயிகள் விழிப்புணர்வு பெற வேண்டும். அதேபோல் யூனியனில் துல்லிய பன்னையம் அமைக்க மானியக் கடன்கள் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், திசு வாழை பயிரிடும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. அரசின் திட்டங்களில் பங்கு பெற்று விவசாயிகள் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**நெற் பயிரில் இலை கருகல் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,03:23 IST

தென்காசி : நெற் பயிரில் இலை கருகல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி வட்டாரத்தில் குமாரகோவில், காசிமேஜர்புரம், குன்னக்கடி, மேலகரம் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிரில் இலை கருகல் நோய் தென்படுகிறது. பாக்டீரியாவால் உருவாகும் இந்நோயானது இளநாற்றுக்களையும் வளர்ச்சி பயிர்களையும் தாக்க வல்லது. நட்ட ஒன்றிருந்து மூன்று வாங்களுக்குட்பட்ட இள நாற்றுக்கள் பாதிக்கப்படும் போது துவக்கத்தில் இலைகள் கருமை கலந்த பச்சை நிறமடைந்து சுருள துவங்குகிறது. பின் மஞ்சள் நிறமடைந்து வாடி கருகி விடும். குருத்து பூச்சியால் தாக்கப்பட்டது போன்ற தோற்றத்தை அளிக்கும். முதிர்ந்த இலைகள் தாக்கப்படும் போது இலையில் அல்லது இலை நுனியில் நீர் சொறிந்த அல்லது மஞ்சள் நிற கோடுகளாக தோன்ற ஆரம்பித்து நுனியிலிருந்து கருக துவங்கும். பின் நோய் முற்றிய நிலையில் பாதிக்கப்பட்ட இலை நுனி வெள்ளை நிறத்தில் மாறி விடும். பாதிக்கப்பட்ட இலைகளின் விளிம்பில் கருகல் அலை அலையாய் காணப்படும். சாதகமான சூழ்நிலைகள் 25-30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை, அதிக அளவு ஈரப்பதம், மழை மற்றும் அதிக அளவில் தண்ணீர் வயலில் பாய்ச்சுதல் போன்றவை இந்நோய் தோன்ற சாதகமான சூழ்நிலைகளாகும். அதி வேகத்தில் காற்றடிப்பதால் இலைகள் சேதமடைவதாலும், பயிர் தேவைக்கு அதிகமான அளவில் உரமிடுவதாலும் இந்நோய் நெற் பயிரை தாக்குகிறது.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள் : இலை கருகல் நோய் பாதிக்கப்பட்ட வயல்களில் தண்ணீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். சரியான அளவில் மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தை இட வேண்டும். அதிக அளவில் தழைச்சத்து இடுவதை தவிர்த்து பயிரின் தேவையறிந்து இட வேண்டும். 40 கிலோ பசுஞ்சாணத்தை 50 லிட்டர் நீரில் கரைத்து 12 மணி நேரம் ஊற வைத்து மறுநாள் காலை வடிகட்டி 200 லிட்டர் கரைசல் தயாரித்து ஒரு ஏக்கர் பரப்பளவில் தெளிக்க வேண்டும். இக்கரைசல் தெளிக்காவிட்டால் ஏக்கர் ஒன்றிற்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டு மற்றும் டெட்ராசைக்ளின் கலந்த கலவை 12 கிராம் மருந்துடன் காப்பர் ஆக்கி குளோரைடு 500 கிராம் மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும். இம்மருந்துகளை தெளிக்கும் போது ஒட்டும் திரவம் ஒன்றை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி அளவில் கலந்து தெளிப்பதால் முழு பலன் கிடைக்கும். இந்நோயால் பயிர் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டால் ஜிங்க் சல்பேட் 1 கிலோ மற்றும் யூனியா 2 கிலோ உரத்தை 200 லிட்டர் நீரில்

கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேளைகளில் ஒரு ஏக்கர் பரப்பளவில் தெளிக்க வேண்டும் என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:00 IST



கடற்பாசி வளர்ப்பு: பெரும்பாலான கடற்பாசி இனங்களுள் உலக அளவில் வளர்ப்புக்கு மிகவும் சிறந்தவை.

1. சிவப்பு பாசிகள் - போர்பைரா, ஜெலிடியெல்லா, கிளையோபெல்டிஸ் யூக்கிமா, கிரே கிலேரியா. 2. பழுப்பு பாசிகள் - லேமினேரியா, அண்டோரியா, மேக்ரோ சிஸ்டிஸ்.
3. பச்சைப்பாசிகள் - மானோலை ரோமா, காலர்ப்பா.தமிழகத்தில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் அண்மைக்கடல் பகுதிகளில் வணிக அளவில் கப்பாபைக்கஸ் அல்வரேசி (Kappaphycus alvarezii) என்னும் கடற்பாசி சுயஉதவி குழுக்களால் சிறப்பாக வளர்க்கப்படுகின்றன. கடற்பாசிகளிலிருந்து அகார்அகார், அல்ஜின், கராசினன் போன்ற பொருட்களைப் பெறலாம். அவற்றின் பயன்பாடு அதிகம். 250க்கும் மேற்பட்ட வழிகளில் அவை பயன்படுகின்றன. கடல்பாசிகள் உணவாவதும், அல்சர் முதல் கேன்சர் வரை மருந்தாவதும் தனிச்சிறப்பு.

<u>வளர்ப்பு முறை:</u> பல இருப்பினும், மூங்கில் மிதவை தெப்பங்கள் (floating bamboo rafts), நீள கயிறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழக கடலோரங்களில் கப்பாபைகஸ் கடற்பாசி வளர்க்கப்படுகிறது. வளர்ப்பு பகுதியிலுள்ள கடல் அலைகளின் தன்மையின் அடிப்படையில் வளர்ப்பு முறையைப் பின்பற்றலாம். அவைகளின் வேகம் குறைவான பகுதிகளுக்கு மூங்கில் மிதப்பு தெப்ப முறை ஏற்றது. கடற்பாசி வளர்ப்பில் ஈடுபடும் ஒருவர் மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10,000 வருமானம் பெற இயலும். கடற்பாசி வளர்ப்பைப்பற்றி அறிந்து கொள்ள "கடற்பாசி வளர்ப்பு - கடலோர மக்களுக்கு வாய்ப்பு' என்னும் பேராசிரியர் வெ.சுந்தரராஜின் நூலைப்பெற்று பயனடையலாம். பெருமளவில் வளர்ப்பை மேற்கொள்ள விரும்புவோர் திட்டங்கள் தயார் செய்யவும், ஆலோசனை பெறவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**முனைவர் வெ.சுந்தரராஜ், முன்னாள் முதல்வர், மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி, 93806 57117.**

***<u>வெள்ளாட்டுப் பால்:</u>*** குழந்தைகள் மற்றும் முதியவர்களின் உடல்நிலையை பராமரிக்கவும் உதவுகிறது. பசுவின்பால் ஒவ்வாமை ஏற்படுத்தும்போது வெள்ளாட்டுப்பால் அதற்கு சிறந்த மாற்றுப்பொருள். வெள்ளாட்டுப்பாலில் கொழுப்புச்சத்து முக்கிய பகுதிப்பொருளாக கருதப்படுகிறது. பாலாடைக்கட்டி தயாரிக்க பயன்படுகிறது. வயிற்று எரிச்சல், ஆஸ்துமா, ஒற்றைத்தலைவலி, பெருங்குடல் அழற்சி, வயிற்றுப்புண், செரிமான கோளாறு, கல்லீரல் மற்றும் பித்தப்பை நோய்கள் மற்றும் மன அழுத்தம் காரணமாக ஏற்படும் தூக்கமின்மை, மலச்சிக்கல் போன்றவற்றால் அவதிப்படுபவர்களுக்கு வெள்ளாட்டுப்பால் சிறந்த ஒன்று. மேலும் வெள்ளாட்டுப்பாலில் உள்ள கேப்ரோரிக், கேப்ரைலிக், கேப்ரிக் மற்றும் இதர கொழுப்பு அமிலங்கள், செரிமான உபாதைகள், சிறுகுடல் நோய்கள், இதயக்குழாய் நோய்கள், பித்தப்பை கற்கள், சிஸ்டிக் பைப்ரோசிஸ் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஆற்றல் அளிப்பதோடு மட்டுமல்லாமல் கொழுப்புகளின் சேமிப்புகளையும் உடலில் தடுத்து நிறுத்தி குறைப்பதாக சில ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**வாத்து வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:00 IST



இந்தியாவில் பரவலாக நாட்டு வகை வாத்துகள் வளர்க்கப் படுகின்றன. இவை ஆண்டுக்கு 100 முதல் 150 முட்டைகள் வரை மட்டுமே உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. அறுவடை நிலங்களில் மேய்த்து வளர்ப்பதால், போதுமான தீவனம் கிடைக்காததும் குறைந்த முட்டை உற்பத்திக்கு காரணம். இது தவிர சில சமயங்களில் வாத்துகளைத் தாக்கக்கூடிய நோய்களுக்கு தடுப்பூசி போடவில்லை என்றாலும் முட்டை உற்பத்தி குறைவதோடு, வாத்துகள் இறப்பும் நேரிடும். தீவன பராமரிப்பு: இறைச்சிவாத்துகளுக்கு: இவ்வகையான வாத்துகள் 7 வாரத்தில் குறைந்தபட்சம் 2.2 முதல் 2.5 கிலோ வரை வளரக்கூடியது. அப்போது அதனுடைய தீவன மாற்றுத்திறன் 3.25 ஆகும். முட்டை வாத்துகளுக்கு: முதல் 20 வாரத்திற்கு வாத்துகளுக்கு 12.5 கிலோ தீவனம் தேவைப்படுகிறது. ஒரு நாளைக்கு 120 முதல் 170 கிராம் தீவனம் என்ற கணக்கில் ஓராண்டிற்கு தோராயமாக 60 கிலோ வரை தீவனம் தேவைப்படும். மேய்ச்சல் முறையில் வளர்க்கப்படும் வாத்துகளுக்கு: அறுவடை செய்த நிலங்களில் உள்ள உதிரி தானியங்கள் புழு, பூச்சிகள், நத்தைகளை உண்டு வாழ்கின்றன. இவ்வகையான தீவனம் அதிக முட்டையிடுவதற்கு போதுமானது அல்ல. ஆகவே மேய்ச்சலில் விடுவதற்கு முன்பாகவும் மேய்ச்சலில் இருந்து வந்த பின்னரும் கூடுதலாக நெல் போன்ற தானியங்களையோ அல்லது வாத்துகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட தீவனங்களையோ நாம் கொடுக்கலாம். ஒரு சில விவசாயிகள் குச்சி தீவனங்களை பயன்படுத்துகின்றனர். இந்த வகையான தீவனங்கள் ஒரு நாளைக்கு 50 கிராம் முதல் அதிகமாக

100 கிராம் வரை கொடுக்கலாம். அப்படி கொடுக்கப்படும் பொழுது தொடர்ச்சியாக முட்டையிடுவதற்கு போதிய ஊட்டச்சத்துகள் தீவனத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்றன.

வாத்துப்பண்ணை பொருளாதாரம்

(200 வாத்துகளுக்கு)

செலவுகள் (2 ஆண்டுகளுக்கு)

1 முட்டையிட தயாராக இருக்கும் பெட்டை வாத்தின் விலை ரூ.20,000 (200 து ரூ.100)

2 தீவனத்தட்டு, தண்ணீர் தட்டு மற்றும் முட்டை அடுக்கும் தட்டு ரூ.4000 (200துரூ.20)

3 தீவனச்செலவு (கோடை காலத்திற்கு மட்டும்) ரூ.27,200

200 து2 கிலோ து 4 மாதங்கள் து கிலோ தீவனம் ரூ.17

மொத்த செலவுகள் ரூ.51,200

வருமானம் (2 ஆண்டிற்கு) ரூ.1,14,000

ஆர்.ஜி.ரீஹானா, விலங்கியல் துறை நிபுணர்,

தாராபுரம், 98944 84806.

**மாவுப்பூச்சிகளை திறம்பட கட்டுப்படுத்த அதிநவீன உயிரி மருந்து பயோவெர்டிசெல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:00 IST



என் பெயர் சுரேஷ், சேந்தமாங்குடி, அய்யம்பாளையம் அஞ்சல், ஏவூர் வழி, முசிறி தாலுகா, திருச்சி மாவட்டத்திலிருந்து எழுதுகிறேன். தற்போது தமிழகத்தில் மாவுப்பூச்சிகளின் தாக்குதலால் லட்சக்கணக்கான ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாய நண்பர்கள் பெருத்த நஷ்டம் அடைந்துவிடுகின்றனர். கோடை காலங்களில் வெப்பநிலை மிக அதிகமாக உள்ளபடியால் இதன் இனப்பெருக்கம் மிகவும் அதிகரிக்கிறது. மேலும் தவறான முறையற்ற ரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டாலும் இதன் வளர்ச்சி இன்னும் பெருக்கமடைகிறது.

மாவுப்பூச்சியை பொதுவாக கட்டுப் படுத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஏனெனில் வெப்ப மண்டல சூழ்நிலையும், காற்றில் ஈரப்பதமும் பூச்சியின் மேல் உள்ள மாவு / மெழுகு போன்ற ஒருவித பொருளும், மருந்து அதனை துளைத்து உள்சென்று அதனுள் உள்ள பூச்சியை கொல்வது என்பது முடியாத செயலாகிறது. என்னுடைய 2 ஏக்கர் மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சியின் தாக்குதல் திடீரென்று தீவிரமானது. உடனே ரசாயன மருந்துகளை பயன்படுத்தி பார்த்தேன். கட்டுப்பாடு கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் எங்களுக்கு இலவச வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்களின் மருந்தான பயோவெர்டிசெல் மற்றும் பயோபவர் என்ற இரு மருந்துகளை பரிந்துரைத்தார்கள். உடனே பயோவெர்டிசெல் ஏக்கருக்கு 500 கிராம் என்ற அளவிலும், பயோபவர் ஏக்கருக்கு 500 மில்லி என்ற அளவிலும் அதனுடன் பயோவெர்சூப்பர் ஒட்டும் திரவம் ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவிலும் கலந்து தெளித்தேன். ஒரே வாரத்தில் மரவள்ளி பயிரின் துளிர்கள் புதிதாக வர தொடங்கி, இலைகள் கரும்பச்சை நிறமாகவும், பயிர் முழுவதும் ஆரோக்கியமாகவும் மாறிவிட்டது. மாவுப்பூச்சியின் கூடுகள் மட்டுமே ஒட்டிக் கொண்டிருக்கிறது. எறும்புகளின் நடமாட்டம், தேன் போன்ற திரவமும் அறவே இல்லை. இதனை பார்த்தவுடன் என்னால் நம்பவே முடியவில்லை. இருந்தபோதிலும் 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் இரண்டு முறை தெளித்தேன். ரசாயன மருந்துகளுக்கு பதிலாக தொடர்ச்சியாக பயோவெர்டிசெல் மற்றும் பயோபவர் மருந்துகளை தெளித்துவந்தாலே மாவுப்பூச்சியை திறம்பட கட்டுப்படுத்தலாம். மாவுப்பூச்சிக்கு தெளிக்கும்போது காலை 9 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்கு மேல் தெளிக்க வேண்டும். கண்டிப்பாக பயோவெட் சூப்பர் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். ரசாயன மருந்துகளுடன் கலக்கக்கூடாது. ஒரு வாரத்திற்கு முன்னும், பின்னும் ரசாயன மருந்துகளை தெளிக்கக் கூடாது. பயோவெர்டிசெல் வெர்டிசீலியன் லக்கானி என்ற மாவுப்பூச்சியை தாக்கி அழிக்கும் பூஞ்சையுடன் அதன் மெட்டபொலைட்ஸ் உள்ளதாலும், பயோபவர் வேம்பின் தன்மை இருப்பதாலும் எளிதாக கட்டுப்பாடு கிடைக்கும் என அந்நிறுவனம் எனக்கு விளக்கமளித்தது. வெறும் வெர்டிசீலியம் மட்டும் கட்டுப்பாடு தராது என்பதையும் விளக்கமாக கூறினார்கள். எனக்கு தெரிந்து மாவுப்பூச்சிக்கு எந்த ரசாயன மருந்தும் பயன் அளிக்காத நிலையில் உடனே பயோவெர்டிசெல் முழு கட்டுப்பாடு தந்ததால் மற்ற விவசாய நண்பர்களுக்கும் பரிந்துரை செய்து வருகிறேன்.

**தொடர்பு: டாக்டர் ஜெய்சங்கர், 94878 01515, 94879 01515.**
**கே.சத்தியபிரபா, உடுமலை-642 154.**

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 22,2010,00:00 IST

மாவுப்பூச்சியை ஈ.எம்.-ஆல் கட்டுப்படுத்தலாம்: ஈ.எம். நொதித்த தாவரக்கரைசலைப் பயன்படுத்தி மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். 20 ஏக்கர் கொண்ட இயற்கை விவசாய தோட்டத்தில் அதிகமாகத் தாக்கப்பட்ட பப்பாளியிலும், வேறு சில தாவரங்களிலும் வாரம் இரு முறை ஈ.எம்.நொதித்த தாவரக்கரைசலை தெளித்ததில் பூச்சியின் தாக்குதலிலிருந்து பாதிக்கப்பட்ட தாவரங்கள் குணமடைந்தன. ஈ.எம்.நொதித்த தாவரக்கலவை தயாரிக்கும் முறை: ஈ.எம். நொதித்த தாவரக்கரைசல் என்பது திறன்மிகு நுண்ணுயிர்களின் நொதித்த கலவையாகும். பூச்சிகொல்லி குணம் கொண்ட ஆடதோடா, சோற்று கற்றாழை, சாமந்தி, பூண்டு, இஞ்சி, மஞ்சள், அலரி, மிளகு, சயாத்தியம், பப்பாளி, துளசி, பிரண்டை, நொச்சி, நுணா போன்ற தாவரங்களின் இலைகளை சேகரித்து அதை துண்டு துண்டாக நறுக்க வேண்டும். பின்னர் காற்று புகாத ஒரு பிளாஸ்டிக் தொட்டியில் மூன்றில் இரண்டு பங்கு நறுக்கிய தாவர இலைகள் மற்றும் குளோரின் கலக்கப்படாத சுத்தமான தண்ணீரை சேர்க்கவேண்டும்.

இத்துடன் 3 சதம் மேப்பிள் ஈ.எம்.1 மற்றும் வெல்லம் சேர்க்கலாம். ஈ.எம்.420 மிலி அல்லது புதிதாக செயலாக்கம் செய்யப்பட்ட ஈ.எம்.கலவை 420 மிலி சேர்த்துக்கொள்ளலாம். நறுக்கிய இலைகளை நீரின் உள்ளே அழுத்தி இருக்க கனமான பொருளை கலவைமேல் வைக்க வேண்டும். பின் காற்று புகாதபடி 7 முதல் 10 நாட்களுக்கு மூடிவைக்க வேண்டும். பத்து நாட்களுக்கு பிறகு ஈ.எம்.நொதித்த தாவரக் கலவையை தாக்கப்பட்ட இலைகளின்மேல் தெளிக்க வேண்டும். கலவையில் உள்ள நீரைமட்டும் வடிகட்டி அதை பத்திரமாக காற்று புகாத சுத்தமான தொட்டியில் வைக்க வேண்டும். இதனுடைய ஆயுட்காலம் இரண்டு மாதங்கள் மட்டுமே.

இந்த ஈ.எம்.நொதித்த கலவையை 1க்கு 500 என்ற விகிதத்தில் நீருடன் கலக்கி தாக்கப்பட்ட செடிகளின் மீது தெளிக்க வேண்டும். (1:300லிருந்து 1:1000 வரை தயாரித்த கலவையை பயன்படுத்தலாம்). மாவுப்பூச்சிகளின் தாக்குதல் கட்டுப்பாட்டிற்கு வரும் வரை தெளிக்க வேண்டும். கட்டுப்பாட்டிற்கு வந்தவுடன் தெளிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மேப்பிள் ஈ.எம்.1 மதர்கலவை ஈகாவின் துணையுடன் இந்தியாவில் உள்ள கோல்கட்டாவில் மேப்பிள் ஆர்கடேசி நிறுவனத்திலிருந்து கிடைக்கிறது.

**தொடர்புக்கு: ஈக்கோ புரோ, ஆரோ சாஜான் வளாகம், ஆரோ இல்லம், ஆரோவில். 0413-262 2469 (பார்வை: நவீன வேளாண்மை, டிசம்பர் 2010)**

**ஒரு கிலோ தக்காளி ரூ.18க்கு ஏலம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2010,22:53 IST

கிணத்துக்கடவு: குறைந்தளவு தக்காளியே கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டிற்கு வந்ததால், ஒரு கிலோ தக்காளி ரூ.18க்கு ஏலம் போனது. கிணத்துக்கடவு பகுதிகளில் அதிகளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டது. கடந்த மூன்று வாரத்திற்கு முன் பெய்த புயல் மழையால், தக்காளி செடிகள் அதிகளவில் அழிந்துவிட்டன. இம்மழையில் இருந்து தப்பிய தக்காளி செடிகளில் இருந்து குறைந்தளவே தக்காளி பறிக்கப்பட்டது.இதனை கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டுக்கு நேற்று கொண்டு வந்தனர். அங்கு நடந்த ஏலத்தில், கேரளா வியாபாரிகளுக்குள் கடும் போட்டி நிலவியது.இதனால், ஒரு கிலோ தக்காளி அதிகபட்சமாக ரூ.18க்கு ஏலம் @பானது. கடந்த வாரத்தில், ஒரு கிலோ தக்காளி ரூ.15க்கு ஏலம் சென்றது. இதற்கு, தக்காளி வரத்து குறைவாக வருவதால், தக்காளிக்கு விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.உற்பத்தி செய்யும் விவசாயிக்கு ஒரு கிலோ தக்காளிக்கு ரூ.18 மட்டுமே விலை கிடைத்துள்ளது. இதற்காக, மூன்று மாதம் விவசாயிகள் தக்காளி விதைப்பு செய்து, நடவு செய்து, களை எடுத்து, கம்பியால் தக்காளி செடிகளை இழுத்து கட்டி வைக்கும் செலவு, மருந்து அடிப்பது மற்றும் தக்காளி பறிப்பதற்கு கூலி கொடுத்தது உள்பட ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளனர்.ஆனால், விவசாயிகளுக்கு கிடைத்த தொகை குறைவானது. ஆனால், ஏலத்தில் எடுத்து செல்லும் வியாபாரிகள் இருமடங்கு விலைக்கு விற்பனை செய்கின்றனர். அதிலும், கேரள வியாபாரிகள் இங்கு எடுத்து செல்லும் தக்காளியை கேரளாவில் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.70 வரை விற்பனை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பருப்பு விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2010,23:23 IST

மதுரை:பருப்பு தயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளர் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது : கடந்த வாரம் 3300 ரூபாய் முதல் 3500 ரூபாய் வரை விற்ற நூறு கிலோ துவரம் பயறு, நேற்று 2900 ரூபாய் முதல் 3600 ரூபாய் வரை விற்கப்பட்டது. பருப்பு 5500 ரூபாய் முதல் 6100 ரூபாய் வரை விற்கப்பட்டது. பாசிப் பயறு 5200 ரூபாய் முதல் 7000 ரூபாய் வரையிலும், பருப்பு 5700 ரூபாய் முதல் 6100 ரூபாய் வரை விற்கப்பட்டது. உளுந்தம் பயறு 3500 ரூபாய் முதல் 4200 ரூபாய் வரையும், பருப்பு 5500 ரூபாய் முதல் 6200 ரூபாய் வரையும் விற்கப்பட்டது, மழை பெய்தும் நிரம்பாத அழகர்கோவில் தெப்பம்: பெருமாள் குளக்கரை சுற்றி வரவேண்டிய அவலம்அழகர்கோவில், டிச.22மதுரையில் போதிய மழை பெய்தும் அழகர்கோவில் தெப்பக்குளம் நிரம்பவில்லை.

இந்த ஆண்டும் சுந்தரராஜ பெருமாள் குளக்கரையை வலம் வர வேண்டிய பரிதாபத்தில் உள்ளார். அழகர்கோவில் சுந்தரராஜ பெருமாள் கோயில் பெருமாளை தரிசிக்க மதுரை மட்டுமல்லாது பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வருகின்றனர். நாளுக்கு, நாள்

அதிகரித்து பக்தர்களின் வருகை அதிகரித்து வருகிறது.கோயிலில், ஆண்டுதோறும் பல்வேறு திருவிழாக்கள் நடக்கிறது. சித்திரை திருவிழா, ஆடித் தேரோட்டம், பங்குனி திருக்கல்யாணம், தெப்பத் திருவிழா போன்றவை சிறப்பு வாய்ந்தவையாகும். அழகர்கோவில் மலைப் பகுதியில் தெப்பம் அமைக்க போதிய இடம் இல்லை. அருகில் உள்ள பொய்கைகரைப்பட்டியில், நாயக்கர் மன்னரால் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தெப்பக்குளம் கட்டப்பட்டது. நீர் வரத்திற்காக அழகர் மலையில் இருந்து ஐந்து கி.மீ., நீளத்திற்கு வாய்க்கால் அமைக்கப்பட்டது. மலையில் பெருக்கெடுக்கும் தண்ணீர் தெப்பத்திற்கு வரும் வகையில் வாய்க்கால் அமைக்கப்பட்டது.

மழைக் காலத்தில் நிரம்பும் தெப்பத்தில் திருவிழாவும் சிறப்பாக நடந்தது. கோயில் பராமரிப்பில் உள்ள இத் தெப்பத்தை பல ஆண்டுகளாக பராமரிக்கவில்லை. அப்பகுதியில் இருந்தவர்கள் நீர்வரத்து வாய்க்கால்களை ஆக்கிரமித்துவிட்டனர். இதனால் நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது. தெப்பத்திற்கு தண்ணீர் வராததால், பல ஆண்டுகள் பெருமாள் குளக்கரையை சுற்றி வலம் வர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆக்கிரமிப்புகளை அகற்றி தெப்பத்திற்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தினமலர் இதழில் செய்தி வெளியிட்டது. அதைத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு முன், தற்காலிக நடவடிக்கையாக, மலையில் இருந்து தெப்பம் வரை உள்ள வாய்க்காலை தூர் வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றினர். அந்த ஆண்டு மட்டும் தெப்பத்தில் தண்ணீர் நிறைந்து, திருவிழாவும் சிறப்பாக நடந்தது.

அதன்பின் மீண்டும் ஆக்கிரமிப்புகள் அதிகரித்ததால், தண்ணீர் வரத்து தடைபட்டுவிட்டது. தற்போது பெய்த மழையில்
அழகர்கோவில் பகுதியில் அதிகமாக மழை பதிவாகியது. இப்பகுதியில் உள்ள அழகர்கோவில் அணை உட்பட, அனைத்து கண்மாய்களும் நிறைந்தது. ஆனால், பராமரிப்பு இல்லாத தெப்பம் மட்டும் இன்னும் நிறையவில்லை. இதனால் இந்த ஆண்டும் சுந்தரராஜ பெருமாள் தண்ணீர் இல்லாத குளக்கரையை சுற்றி வர வேண்டிய பரிதாப நிலையில் உள்ளார். பல கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்து வரும் கோயில் நிர்வாகம், தெப்பத்திற்கு நிரந்தர வாய்க்கால் அமைத்து, தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் திருவிழாவும் சிறக்கும். இல்லையென்றால், இதே அவலம்தான் நீடிக்கும்.கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

**காய்கறி விலை உயர்வு: வாங்க ஆளில்லை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2010,23:24 IST

மதுரை:தொடர் மழையால், மதுரை மாட்டுத்தாவணி மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து குறைந்ததால், விலை அதிகரித்தது. இதனால் வாங்குவோரின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது.சங்கத் தலைவர் பி.எஸ். முருகன் கூறியதாவது :விலை உயர்வால், கிலோ கணக்கில் வாங்கியவர்கள், இன்று கால் கிலோ, அரைகிலோ என குறைத்துக் கொண்டனர். கால் கிலோ வாங்கியவர்களை சில நாட்களாக பார்க்க முடியவில்லை. சில்லரை கடைகளில் 10 ரூபாய் கூடுதலாக விற்கின்றனர்.

நேற்று ஒரு கிலோ தக்காளி 25 ரூபாய், கத்தரிக்காய் 30-40,பூசணிக்காய் 7, சுரைக்காய் 10, கேரட் 20, பீட்ரூட் 15, காலிபிளவர் 7-10, முள்ளங்கி 15, முட்டைகோஸ் 15, வெங்காயம் 60, சிறியது 30, பாகற்காய் 20, சிறியது 40, உருளைகிழங்கு 15-18, சேனை கிழங்கு 18, கருணைகிழங்கு 20, பீன்ஸ் 25, பட்டர் பீன்ஸ் 40, சோயா பீன்ஸ் 35, பட்டாணி 40, இஞ்சி 30, முருங்கைக்காய் 40, அவரைக்காய் 50, கொத்தவரை 15, புதினா 10, கொத்தமல்லி 15, கறிவேப்பிலை 15, பச்சை மொச்சை 30, பச்சை மிளகாய் 25, ஆந்திரா பச்சை மிளகாய் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.இந்த மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

***விலை மிகவும் உயர்ந்துள்ளதால் பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் இறக்குமதி***



*மாதவி சாலி – ஜெயஸ்ரீ போஸ்லே*

*சண்டிகார் / பூனா*

*வெங்காயம் விலை, விண்ணைத்தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது. சென்ற சில தினங்களில் மட்டும் விலை இரண்டு மடங்கு உயர்ந்து தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 வரை விற்கப்படுகிறது. இது குடும்ப பெண்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து இந்திய நிறுவனங்கள் பாகிஸ்தானிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய தொடங்கியுள்ளன.*

*12 டிரக்குகள்*

*பாகிஸ்தானிலிருந்து 12 டிரக்குகளில் சுமார் 180 டன் வெங்காயம் இந்திய எல்லைக்கு வந்துள்ளது. கடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு தரை வழியாக வெங்காயத்தை இறக்குமதி செய்வது இதுவே முதல் முறையாகும்.*

*இதுகுறித்து அமிர்தசரஸ் நகரத்தைச் சேர்ந்த வெங்காய வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்த ராஜ்தீப் ஊப்பல் கூறுகையில், "உள்நாட்டில் வெங்காயம் விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. எனவே நிறுவனம் பாகிஸ்தானிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்கிறது. 500 டன் (5 லட்சம் கிலோ) வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.*

*சில மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் கடும் வெள்ளம் ஏற்பட்டு, வெங்காயம் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அப்போது இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது நிலைமை மாறியுள்ளது. நம் நாட்டில் வெங்காயம் அதிக அளவில் உற்பத்தியாகும் மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் கடும் வெள்ளச் சேதத்தால் உற்பத்தி குறைந்து, அளிப்பு குறைந்துள்ளது. இதனால் பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது.*

*தேவைப்பாடு*

*உள்நாட்டில் தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் அளிப்பு இல்லாததால், வெங்காயம் ஏற்றுமதிக்கு ஜனவரி 15-ந் தேதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்போது சந்தைகளுக்கு வெங்காயம் வரத்து தொடங்கிவிடும் என்பதால் விலையும் ஓரளவிற்கு கட்டுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## ***ஏப்ரல் – அக்டோபர் மாத காலத்தில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 3.70 லட்சம் டன்னாக அதிகரிப்பு***



எஸ் சனந்தகுமார்
கொச்சி

நடப்பு ஆண்டில், ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான ஏழு மாதங்களில் நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 3.48 சதவீதம் உயர்ந்து 3,70,737 டன்னாக அதிகரித்துள்ளது. இது, ரூபாய் மதிப்பின் அடிப்படையில் 15.40 சதவீதமும், டாலர் அடிப்படையில் 21.53 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.

அமெரிக்கா – ஜப்பான்

அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தேவைப்பாடு உயர்ந்ததே ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சிறப்பான வளர்ச்சிக்கு காரணம் என கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 44 சதவீதம் முன்னேற்றம் கண்டுள்ளது. மெக்சிகோ வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஏற்பட்ட பாதிப்பும் ஏற்றுமதிக்கு வலுச்சேர்த்துள்ளது. அதே சமயம் முக்கிய சந்தையான ஐரோப்பாவில் அளவின் அடிப்படையில் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. அண்மைக் காலமாக கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி துறையில் மீண்டும் எழுச்சி ஏற்பட தொடங்கியுள்ளது. இந்த அபார வளர்ச்சிக்கு, அதிக மதிப்பு வாய்ந்த இறால்களே காரணமாகும். மொத்த கடல் உணவுபொருள்கள் ஏற்றுமதியில் இறால்களின் பங்களிப்பு, 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. பத்து மாத காலத்தில் இறால் ஏற்றுமதி ரூபாய் மதிப்பில் 27 சதவீதமும், டாலர் மதிப்பில் 34 சதவீதமும் அதிகரித்துள்ளது. அளவின் அடிப்படையில் 8 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. நடப்பு ஆண்டில், கொச்சி, கொல்லம் மற்றும் மங்களூர் சார்ந்த கடல் பகுதிகளில் ஊசி கணவாய் மீன்பிடிப்பு விறுவிறுப்படைந்துள்ளது. அதிக அளவில் கிடைத்து வருவதால், ஊசி கணவாய் மீன்கள் ஏற்றுமதியின் அளவு 69 சதவீதம் அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பில் 87 சதவீதமும், டாலர் மதிப்பில் 99 சதவீதமும் ஏற்றுமதி உயர்ந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள்

இந்தியாவிலிருந்து கடல் உணவு பொருள்களை இறக்குமதி செய்வதில் ஐரோப்பிய நாடுகள் முதலிடத்திலும், ஜப்பான் இரண்டாவது இடத்திலும் உள்ளன. கடல் மீன்கள் ஏற்றுமதி வாயிலான மொத்த அன்னியச் செலாவணி வருவாயில் இந்த நாடுகளின் பங்களிப்பு முறையே 26 சதவீதம் மற்றும் 16 சதவீதமாக உள்ளது.

நம் நாட்டில் அதிகமாக கிடைக்கும் ‘பிளாக் டைகர்’ எனப்படும் இறால் மீன்களை வாங்குவதில் ஜப்பான் நாட்டினர் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏற்றுமதி அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்று கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

## வெங்காய விலையை கட்டுப்படுத்த பிரதமர் நடவடிக்கை மத்திய அமைச்சகங்களுக்கு கடிதம் அனுப்பினார்

*புதுடெல்லி, டிச.22–*
*வெங்காய விலையை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய வேளாண் அமைச்சகம் மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றுக்கு பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் அனுப்பி உள்ளார்.*
*அமைச்சகங்களுக்கு கடிதம்*
*நாடு முழுவதும் வெங்காயம் விலை வேகமாக உயர்ந்து வருகிறது. இரண்டு வாரங்களுக்குள் இரண்டு மடங்கு அதிகரித்து விட்டது. சென்னையில் கிலோவுக்கு ரூ.100 வரை வெங்காய விலை சென்று விட்டது. இதுபோல, டெல்லி, மும்பை, பெங்களூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் வெங்காயம் விலை பல மடங்கு அதிகரித்து விட்டது.*
*இதனால், வெங்காயம் தொடர்புடைய அனைத்து உணவு பொருட்களின் விலையும் தாறுமாறாக உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, நாடு முழுவதும் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. இந்த நிலையில், வெங்காய விலை உயர்வு குறித்து பிரதமர் மன்மோகன்சிங் கவலை தெரிவித்துள்ளார். விலையை கட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளார்.*
*இதுகுறித்து பிரதமர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–*
*தினந்தோறும் கண்காணிப்பு*
*வெங்காயத்தின் அசாதாரண விலை உயர்வு குறித்து பிரதமர் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளார். குறுகிய காலத்துக்குள் நாடு முழுவதும் உள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் இரண்டு மடங்கு விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூ.70–க்கு மேல் விற்கப்படுகிறது. வினியோக குறைபாட்டால் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கலாம். ஆனால், பதுக்கலால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*
*தாறுமாறாக உயர்ந்துள்ள வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என பிரதமர் விரும்புகிறார். குறிப்பிட்ட அளவுக்குள் வெங்காய விலை கட்டுப்படுத்தப்பட வேண்டும். விலையை கட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தினந்தோறும் உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.*
*உணவு அமைச்சகத்துக்கு கேள்வி*
*வெங்காயத்தின் மொத்த விலையானது குறுகிய காலத்துக்குள் இரண்டு மடங்கு அதிகரித்து இருக்கிறது. குவிண்டாலுக்கு ரூ.1,700–ல் இருந்து குவிண்டாலுக்கு ரூ.3,500–ஆக குறுகிய இடைவெளியில் உயர்ந்தது எப்படி என்பது குறித்து உணவு அமைச்சகம் விளக்க வேண்டும்.*
*உடனடியாக, வெங்காயம் விலை உயர்ந்தது ஆச்சரியம் அளிக்கிறது. வெங்காய இருப்பு குறித்து முன்னதாகவே உணவுத் துறை அமைச்சகம் அனுமானிக்காதது ஏன்? இவ்வாறு பிரதமர் அலுவலக கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.*

நிதி மந்திரி நடவடிக்கை

இதற்கிடையே உணவு அமைச்சகம், வர்த்தக அமைச்சகம், கம்பெனிகள் விவகார அமைச்சகம், நுகர்வோர் அமைச்சகம் ஆகிய அமைச்சகங்களுக்கு மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜியும் தனியாக விளக்கம் கேட்டுள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் கூறுகையில், "வெங்காயம் விலை மிக அதிகமாக உயர்ந்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. வெங்காய கிடங்கில் இருந்து வெளியாகும் வினியோகம் மற்றும் நுகர்வோர் சந்தை ஆகியவற்றுக்கு இடையே பொருந்தா இடைவெளி உள்ளது. வெங்காய வினியோகத்தில் உள்ள தடைகளை சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் நீக்க வேண்டும். இதுகுறித்து நானும் பேச இருக்கிறேன்" என்றார்.

இதையடுத்து கம்பெனிகள் விவகார மந்திரி சல்மான் குர்ஷித், வர்த்தகம் மற்றும் தொழில் துறை மந்திரி ஆனந்த் சர்மா ஆகியோர் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.

இடதுசாரிகள்

வெங்காய விலை விவகாரத்தில் வியாபார சக்திகளின் நெருக்கடிக்கு முன்பு மத்திய அரசு செயலிழந்து விட்டதாக இடதுசாரிகள் புகார் கூறியுள்ளனர். இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்டு தேசிய செயலாளர் டி.ராஜா கூறியதாவது:–

நாட்டின் அனைத்து பாகங்களிலும் வெங்காய விலை விண்ணை முட்டிக்கொண்டு உள்ளது. இதுபோல, அனைத்து உணவு பண்டங்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. பால் விலை, பெட்ரோல் விலை என அனைத்துமே கடுமையாக உயர்ந்து வருகிறது. அனைத்து விலைகளும் மேலே, மேலே சென்று கொண்டிருக்கையில் மத்திய அரசு மவுன பார்வையாளராக இருந்து வேடிக்கை பார்க்கிறது.

வியாபார சக்திகளின் முன்னால், செயலிழந்த நிலையில் மத்திய அரசு இருக்கிறது. சந்தையில் உள்ள ஆதிக்க சக்திகளின் முன்பு முற்றிலுமாக சரணடைந்து விட்டது. இவ்வாறு டி.ராஜா தெரிவித்தார்.

## வெங்காயம் விலை உயர்வு 3 வாரங்களுக்கு நீடிக்கும் மத்திய மந்திரி சரத்பவார் தகவல்

புதுடெல்லி, டிச.22–

வெங்காயம் விலை உயர்வு மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கும். அதன் பின்னர் 2 அல்லது 3 வாரங்களில் விலை குறைய தொடங்கும் என்று மத்திய விவசாய மந்திரி சரத்பவார் தெரிவித்தார்.

கிடு, கிடு விலை உயர்வு

15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்ற பெரிய (பெல்லாரி) வெங்காயத்தின் விலை 2 வாரத்துக்கு முன்னர் திடீரென 45 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை அதிகரித்தது. தொடர் மழை காரணமாக வெங்காய உற்பத்தி குறைந்ததும், இந்தியாவிலேயே அதிகமாக வெங்காயம் பயிராகும் மராட்டிய மாநிலத்தில் குறிப்பாக நாசிக் பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த வெங்காயம் முழுவதும், மழையால் அழுகிப்போனதாலும் சந்தைக்கு வெங்காய வரத்து குறைந்தது. இதனால் இந்த விலையேற்றம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்த விலை உயர்வு நேற்று முன்தினம் திடீரென அபரிமிதமாக விண்ணை தொடும்

அளவுக்கு ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. 1 கிலோவுக்கு 70 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை உயர்ந்தது. டெல்லி போன்ற நகரங்களில் இந்த விலை 100 ரூபாய் வரை அதிகரித்தது.
இதே போல சாம்பார் வெங்காயம் என்று அழைக்கப்படும் சிறிய நாட்டு வெங்காயத்தின் விலையும் கிலோவுக்கு 60 ரூபாய் வரை உயர்ந்தது.
ஏற்றுமதிக்கு தடை
வெங்காயத்துக்கு மேலும் பற்றாக்குறை ஏற்படலாம் என்று கருதி வியாபாரிகள் பதுக்கியதும், விலை அதிகரிக்கலாம் என்ற ஊக வாணிபத்தின் காரணமாகவும் இந்த அபரிமிதமான விலை உயர்வு ஏற்பட்டதாக சில்லரை வியாபாரிகள் தெரிவித்தனர்.இந்த விலை உயர்வை அறிந்த மத்திய அரசு, ஜனவரி 15–ந் தேதி வரை இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய தடை விதித்தது.
விலை உயர்வு நீடிக்கும்
ஆனாலும், இப்போது உயர்ந்துள்ள வெங்காயத்தின் விலை உடனடியாக குறையாது என்றும், மேலும் 3 வாரங்களுக்கு இந்த விலை உயர்வு நீடிக்கும் என்றும் மத்திய அரசு நேற்று அறிவித்தது. இதுகுறித்து மத்திய விவசாய மந்திரி சரத்பவார் நிருபர்களிடம் கூறியதாவது:–
வெங்காயத்தின் விலை உயர்வு இன்னும் 3 வாரங்களுக்கு நீடிக்கும். விலையை குறைக்கும் நடவடிக்கையாக வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதிக்கு உடனடியாக தடை விதிக்கப்பட்டது. ஏற்றுமதியை தடை செய்யும் நோக்கில், வெங்காயத்தின் ஏற்றுமதி விலையையும் டன்னுக்கு 525 டாலரில் இருந்து 1,200 டாலராக உயர்த்தப்பட்டது.
கடும் நடவடிக்கை
ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டாலும், வெங்காய விலை உயர்வு இன்னும் 3 வாரங்களுக்கு நீடிக்கும். சில வாரங்களில் உத்தரபிரதேசம், குஜராத், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து ஏராளமாக வெங்காயம் வரத்தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாகவும், ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதாலும் 3 வாரங்கள் கழித்து 2 அல்லது 3 வாரங்களில் வெங்காயத்தின் விலை குறைய தொடங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.
அதிக விலைக்கு விற்க வேண்டும் என்ற நோக்கத்தில் வெங்காயத்தை வியாபாரிகள் பதுக்கி வைத்தாலோ, ஊக வாணிபத்தில் ஈடுபட்டாலோ அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரிக்கிறேன். வெளிநாடுகளில் இருந்து இப்போதைக்கு மத்திய அரசு வெங்காயம் இறக்குமதி செய்யும் உத்தேசம் இல்லை.
இவ்வாறு சரத்பவார் தெரிவித்தார்.
பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி
இந்த நிலையில் வடமாநில வியாபாரிகள் சிலர் அண்டை நாடான பாகிஸ்தானில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய தொடங்கி உள்ளனர். அதன்படி நேற்று முன்தினம் இரவே சுமார் 15 லாரி வெங்காயம் பஞ்சாப் வழியாக வந்ததாக அமிர்தசரஸ் நகரில் சுங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இறக்குமதியான பாகிஸ்தான் வெங்காயத்தின் அடக்க விலை ரூ.18 முதல் ரூ.20 என்று கூறப்படுகிறது.

## அமராவதி அணையில் இருந்து உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றம் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி

*மடத்துக்குளம், டிச.22–*
*அமராவதி அணையில் இருந்து உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருவதால், பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*
*அணையின் முழு கொள்ளளவு*
*மடத்துக்குளம் அமராவதி அணை மூலம் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் அமராவதி அணை நிரம்பியது.*
*கடந்த மாதம் 24–ந் தேதி அமராவதி அணை முழு கொள்ளளவை எட்டிய நிலையில், அணைக்கு வந்த 8 ஆயிரம் கன அடி தண்ணீரும் ஆற்றில் திறந்து விடப்பட்டது. 24–ந் தேதியில் இருந்து இன்று வரை தொடர்ந்து அணையில் முழு கொள்ளளவில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு உள்ளது.*
*தூவானம் அருவி*
*கடந்த 20 ஆண்டுக்கு பிறகு அமராவதி அணைக்கு தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டு இருப்பதால், அணையில் இருந்து உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது. மேலும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், அமராவதியின் நீர் ஆதாரமான தேனாறு, சின்னாறு, பாம்பாறு ஆகிய ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து தூவானம் அருவியில் பெரும் இரைச்சலுடன் தண்ணீர் கொட்டி வருகிறது.*
*அமராவதி அணையின் மொத்த கொள்ளளவு 4047.41 மில்லியன் கன அடியாகும். நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர் மட்டம், முழு கொள்ளளவு 90 அடியை தொட்டுள்ளது. அணைக்கு வினாடிக்கு 794 கன அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு பிரதான கால்வாய் வழியாக 150 கன அடி நீரும், ஆற்றில் 644 கன அடி நீரும் திறந்து விடப்பட்டு உள்ளது. அமராவதி ஆற்றில் இருந்து தொடர்ந்து உபரி நீர் திறந்து விடப்பட்டு உள்ளதால் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

## கோவை, வேளாண் பல்கலைக்கழக பேராசிரியருக்கு விருது இந்திய உழவியல் சங்கம் வழங்கியது

*கோவை, டிச.22–*
*கோவை வேளாண் பல்கலைக்கழக உழவியல் துறை பேராசிரியராக பணியாற்றி வருபவர் சின்னுசாமி. இவருக்கு டில்லியில் உள்ள இந்திய உழவியல் சங்கம் 2008–ம் ஆண்டுக்கான சிறப்பு உறுப்பினர் தகுதி விருதை வழங்கி உள்ளது.*
*கடந்த வாரம் பெங்களூரில் நடைபெற்ற சங்கத்தின் ஆண்டு விழாவில் இந்திய ஆராய்ச்சி குழு துணைப் பொதுச் இயக்குனர் அரவிந்குமார், பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.நாராயணகவுடா, இந்திய உழவியல் சங்க தலைவர் எம்.எஸ்.கில், பெங்களூர் வேளாண் பல்கலைக்கழக முதுநிலை பட்டப்படிப்பு*

*முதல்வர் நஞ்சப்பா ஆகியோர் முன்னிலையில், மத்திய அரசின் மானாவாரி வேளாண்மை நிர்வாக தலைமைச் செயல் அதிகாரி ஜே.எஸ்.சாம்ரா வழங்கினார். பேராசிரியர் சின்னுசாமி கடந்த 25 ஆண்டுக்கும் மேலாக உழவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் புரிந்த பல்வேறு சாதனைகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டு உள்ளது. குறிப்பாக நெல், கரும்பு, பயிர் வகைகளில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறை மற்றும் நச்சுத் தன்மை உடைய களைகளின் கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குவதிலும் சிறப்பான பணி ஆற்றியமைக்காக இந்த விருது வழங்கப்பட்டு உள்ளது.*

*தற்போது அகில இந்திய ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாட்டு ஆய்வு பிரிவின் முதன்மை ஆராய்ச்சியாளராக பணியாற்றும் பேராசிரியர் சின்னுசாமி இதுவரை 30–க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச களை அறிவியல் புத்தகத்தில் வெளியிட்டுள்ளார். இதுவரை இந்திய களை ஆராய்ச்சி குழுவின் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதை 2 முறை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*



ஊட்டி உழவர்சந்தையில் நேற்று வெங்காயம் வாங்க மக்கள் அலைமோதிய காட்சி.

### ஊட்டி உழவர் சந்தையில்

# வெங்காயம் வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியதால் பரபரப்பு

ஊட்டி, டிச.22-

ஊட்டி உழவர் சந்தையில் நேற்று வெங்காயம் வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியதால் பரபரப்பு ஏற்பட்டது.

### உயர்ந்து வரும் வெங்காய விலை

கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழையின் காரணமாக வெங்காயம் உள்பட அனைத்து காய்கறி களின் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வெங்காயத்தின் விலை கிடு, கிடு என உயர்ந்து வருகிறது.

இதனால் வெங்காயம் இல்லாமல் தான் இனி சாம்பார் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. வெங்காயத்தை நருக்கினால் தான், கண்ணீர் வரும். ஆனால் தற்போது அதன் விலையை கேட்டாலே கண்ணீர் வந்து விடும் போலிருக்கிறது.

### ஏற்றுமதிக்கு தடை

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதங்களில் ஒரு கிலோ வெங்காயம் அதிகபட்சமாக ரூ.20 முதல் ரூ.24 வரை விற்பனை ஆனது. ஆனால் தற்போதுஒருகிலோவெங்காயம் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. சமவெளி பகுதிகளை காட்டிலும் ஊட்டியில் சற்று விலை குறைவாக உள்ளது. வெங்காய விலை உயர்ந்து வருவதால் மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இதனால் வெங்காயத்தின் விலை குறையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஊட்டி மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ வெங்காயம் ரூ.60 முதல் ரூ.64 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் உழவர்சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.42க்கு விற்பனை செய்யப் பட்டது.

### பரபரப்பு

உழவர்சந்தையில் காலை நேரத்தில் கூட்டம் குறைவாக இருந்தது. பின்னர் சுமார் 11 மணி அளவில் மார்க்கெட்டை காட்டிலும் உழவர்சந்தையில் வெங்காயத்தின் விலை குறைவு என்றதகவல்பரவியது. இதனால் ஊட்டி உழவர்சந்தையில் மக்கள்கூட்டம் அலைமோதியது. வெங்காயம் வாங்க ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டு வாங்கினார்கள். கூட்டம் அதிகமான தாலும், போட்டி ஏற்பட்டதாலும் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது பற்றி அறிந்த உழவர்சந்தை நிர்வாக அதிகாரி சந்திரன் மற்றும் ஊழியர்கள், மக்களை கட்டுப்படுத்தி, ஒருவருக்கு ½ கிலோ வீதம் அனைவருக்கும் வெங்காயம் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்தனர். இதனால் அமைதி திரும்பியது.

### மைசூரில் இருந்து வருகிறது

இது குறித்து உழவர்சந்தை நிர்வாக அதிகாரி சந்திரன் கூறியதாவது:-

ஊட்டி உழவர்சந்தைக்கு மைசூர் பகுதியில் இருந்து வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. கடந்தசில நாட்களாக வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது. நேற்று உழவர் சந்தைக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ அளவில் வெங்காயம் கொண்டு வரப்பட்டது.

ஒரு கிலோ ரூ.36 முதல் ரூ.42 வரை விற்கப்பட்டது. மார்க்கெட்டில் ரூ.60 முதல் ரூ.64 வரை விற்பனையானது. மார்க்கெட்டை விட உழவர் சந்தையில் விலை குறைவு என்பதால் மக்கள் கூட்டம் அதிகமானது. காலை 11 மணி அளவில் வெங்காயம் வாங்க மக்களிடையே போட்டி ஏற்பட்டது. பின்னர் அனை வருக்கும் வெங்காயம் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஒருவருக்கு ½ கிலோ வீதம் வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.